விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 28 | வியாழக்கிழமை | (14.10.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 300

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சீமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## உறுதியான அரசை அமைப்பதற்காக

# தேர்தல் முறையில் மாற்றம் கொண்டுவர அரசாங்கம் தீவிர கவனம் செலுத்துகிறது!

### பொதுநலவாயப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு



(நமது நிருபர்)

**பாராளுமன்றத்திற்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான புதிய தேர்தல் முறையொன்றை அமுல்படுத்துவது குறித்து அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

பொதுநலவாய நாடுகளின் பாராளுமன்ற சங்கத்தின் பிரிட்டன் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியபோதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்ற இச் சந்திப்பில் பிரிட்டன் பிரதிநிதிகளிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தேர்தல் தொகுதி அடிப்படையில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசார முறையை ஒழுங்கிணைத்து புதிய தேர்தல் முறை வகுக்கப்படவுள்ளது. இதன் மூலம் சிறுபான்மை மக்களுக்கு சமமான அங்கம் வகிக்கக்கூடிய வாய்ப்பு கிட்டக் கூடும். தற்போதைய தேர்தல் நடைமுறை மூலம் சிறுபான்மை மக்களின் தெரிவுகள் அதிகம் இடம்பெறுவதில்லை. இதனால் ஸ்திரமான அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கும் முடியாமல் உள்ளது. அதனை மாற்றவேண்டிய அவசியம் தற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை – இந்திய ஒப்பந்தமே சமாதான முயற்சிக்கு வித்திட்டது!

### சோனியாவிடம் ரணில் தெரிவிப்பு

(புதுடில்லி)

அமரர்களான ஜே.ஆர். ஜயவர்த்தனாவும், ராஜீவ்காந்தியும் செய்துகொண்ட இலங்கை இந்திய ஒப்பந்தமே இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு வித்திட்டதாக அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்தியத் தலைவர்களைச் சந்திக்கும் திட்டத்திற்கு அமைவாக நேற்று காங்கிரஸ் தலைவியும், அமரர் ராஜீவ்காந்தியின் மனைவியுமான சோனியாகாந்தியைச் சந்தித்தபோதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சோதனைச் சாவடியில் இருவர் கைது

(ஓமந்தை)

போலி தேசிய அடையாள அட்டைய்யை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முள்ளியவளை வாசியொருவர் நேற்றுமுன்தினம் நண்பகல் ஓமந்தை பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் வல்லிபுரத்தைச் சேர்ந்த வசந்தராஜா என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வாகனம் தொடர்பான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதி வவுனியாவில் கொலை

வவுனியாவில் இனந்தெரியாத நபர்களினால் வாகனத்துடன் கடத்திச்செல்லப்பட்ட ஆட்டோசாரதியொருவர் படுகொலை செய்யப்பட்டு 50 அடி ஆழமான நீரில்லாத கிணற்றுக்குள் வீசப்பட்டுள்ளார். நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்ட ஆட்டோசாரதி மகாறம்பைக்குளம் ஜின்னா நகரைச் சேர்ந்த மொகமட் அமீன் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல்துறையினரின் வருகைக்காக காத்திருக்கிறது கண்காணிப்புக்குழு

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ள அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல்துறையினர் இலங்கைக்கு திரும்பும் வரை காத்திருப்பதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தெரிவித்திருக்கிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் சொல்நஸ் போர் நிறுத்த உடன்படிக்கையுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாகவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட இரு ஊர்காவற்படையினரை விடுதலை செய்வது தொடர்பாகவும் கிழக்கில் அண்மைக் காலமாக இடம் கின்ற குழப்ப நிலைகள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அவர்,

படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை உறுதியாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (ரு-121)

## திருமலையில் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்ட சிங்கள பிரதேசங்களில் நேற்று கடைப்பிடிக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக அம் மாவட்டத்தின் வழமைநிலை பாதிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பணிப் புறக்கணிப்பை முன்னிட்டு திருகோணமலை மற்றும் கந்தளாய் ஆகிய நகரங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவல் படை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனைக் கடலில் மீனவர்மீது தாக்குதல்

(கரவெட்டி)

மணற்காடு குடத்தனைப் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் வேறொரு படகில் வந்தவர்களால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்கப்பட்ட மீனவர்களில் ஒருவர் கரை சேர்ந்துள்ளார். மற்றவரைக் காணவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலை மேற்கொண்டவர்கள் படகின் இயந்திரம், சூள் லாம்பு மற்றும் பெற்றோல் கலன் ஆகியவற்றை எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்த மீனவர் ஏனைய மீனவர்களின் உதவியுடன் கரைசேர்ந்தார். மணற்காட்டைச் சேர்ந்த சவரிமுத்து நோபேட் (வயது 38) என்பவரே காணாமற் போனவராவார்.

(12 அம் பக்கம் பார்க்க)

### ம.உ. ஆணைக்குழு அதிகாரி மீதான தாக்குதல்

## பொலிஸார் இருவர் நேற்று அடையாளம் காணப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்து யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ரூவான் சந்திரசேகர தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

அடையாளம் காண்பதற்காக பொலிஸார் நீதிமன்றத்திற்கு அழைத்துவரப்பட்டனர். இருவர் சுகவீனம் காரணமாக சமுகமளிக்காததினால் 44 பொலிஸாரே அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர். நேற்று சமுகம் அளிக்காத பொலிஸ் கான்ஸ்டபிள் இருவரும் இன்று அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்படுவர். இச்சம்பவம் தொடர்பாக இரு பொலிஸார் அடையாளம் காட்டப்பட்டனர்.

20 ஆம் சந்தேக நபரான கான்ஸ்டபிள் தனபாலாவும், 44ம் சந்தேக நபரான உதவிக் கான்ஸ்டபிள் புஸ்பலாவ் பெர்னான்டோவும் அடையாளம் காட்டப்பட்டனர்.

இவர்களில் 20 ஆம் சந்தேக நபர் முதலாம் சாட்சியான ரூவான் சந்திரசேகராவாலும், 44 ஆம் சந்தேக நபரை 2 ஆம் சாட்சியான பெரோசும், முதலாம் சாட்சியான ரூவான் சந்திரசேகராவும் அடையாளம் காட்டினர்.

குறிப்பிட்ட இரண்டு கான்ஸ்டபிள்களையும் 15 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் பொலிஸ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கி இளைஞர் பலி;

(முல்லைத்தீவு)

மின்னல் தாக்கியதில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார் . இவரது தந்தையும் சகோதரியும் எரிகாயங்களுக்குள்ளாகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் முல்லைத்தீவு கற்சிலை மடுவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் விஜயரட்ணம் விஜயசுதர்சன் (வயது20) என்பவரே உயிரிழந்தவராவார். தந்தையா விஜயரட்ணம் (வயது52) இவரது மகளான விஜயரட்ணம் மைத்தனா (வயது8) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். காயமடைந்த இருவரும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க-8)

## இன்று ஒரு தகவல்

# மேதைகளின் மறதி

ஒரு பெரிய தத்துவப் பேராசிரியர் இருந்தார். தினமும் காலையில் சிறிது நேரம் நடந்துவிட்டு வருவது இவரது வழக்கம். ஒருநாள் மிக நீண்ட தூரம் போய்விட்டார். திரும்பிவரும்போது மிகவும் களைத்துப் போய்விட்டார். கையில் இருந்த கைத்தடியின் உதவியுடன் மெதுவாகத் திரும்பி வந்து கொண்டிருந்தார். வரும்போதே மனதிற்குள் தீர்மானம் செய்துகொண்டார். "நேராக வீட்டுக்குப போக வேண்டியது. படுக்கை அறைக்குள்ளே நுழைய வேண்டியது. கைத்தடியை சுவறறு மூலைக்குள் வைத்துவிட்டு பொத் எனறு படுக்கையில் விழுந்து ஆனந்தமாக ஓய்வெடுக்க வேண்டியது" இது தான் அவரது திட்டம்.

திட்டமெல்லாம் சரிதான். அதை நிறைவேற்றும் போது தான் ஒரு சிறு குழப்பம் ஏற்பட்டுவிட்டது. வேறு ஒன்றுமில்லை. இவர் நேராக உள்ளே சென்றார். கையிலிருந்த தடியை படுக்கையில் வைத்தார். இவர் நேராகப் போய் சுவற்றின் மூலையில் சாய்ந்து குற்றியைப் போல் விறைப்பாக நின்றுவிட்டார்.

தற்செயலாக அந்தப்பக்கம் வந்த இவரது மனைவி இதைப பார்த்துப் பயந்து விட்டார். "ஐயையோ என்னாகி விட்டது உங்களுக்கு ?" என்று அலறினார். அவா மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்துவிட்டுச் சொன்னார் "உஷ்!சத்தம் போடாதே! பேசாமல் இரு. வேறு ஒன்றுமில்லை. நீண்ட தூரம் நடந்தது சிறிது களைபபாக இருந்தது. அது தான் வந்தவுடனே தடியை சுவற்றல் சாத்தி வைத்துவிட்டு நான் கட்டிலில் படுத்து சுகமாக ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். இது எவவளவு பெரிய ஞாபக மறதி பாருங்கள். இது நகைச்சுவைத் துணுக்கு இல்லை. நிஜமாகவே நடந்ததாம்.

மிகவும் ஆச்சரியமாகத்தான் உள்ளது. மேதைகளில் பலரும் இப்படித்தான். ஞாபக மறதிக்காரர்களாக உள்ளனர். **Thomas Huxlay** என்பவர் உலகப் புகழ பெற்ற பிரிட்டிஷ் விஞ்ஞானி. இவரை இன்னுமோர் ஊருக்கு விரிவுரை நிகழ்த்துவதற்காக அழைத்திருந்தர்கள் இவரும் ரயிலில் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார்.

ரயில் மிகவும் தாமதமாகப் போய்ச் சேர்ந்தது. இவர் அவசரமாக ரயிலை விட்டு இறங்கி ஓடி அங்கேயிருந்த ஒரு குதிரை வண்டியில் ஏறி "வேகமாகப் போ" என்று கத்தினார். குதிரை வண்டியும் ஓட ஆரம்பித்தது. நீண்ட தூரம் வந்ததும் ஒரு திருப்பம் வந்தது. சாரதி "எந்தப்பக்கம் திரும்ப வேண்டும்?" என்று கேட்டார். அப்போது தான் இவர் விழித்தார். எங்கே போக வேண்டும் என்பதை மறந்து விட்டார்.

"வண்டியில் ஏறும்போது எங்கு போக வேண்டும் என்று கூறினேன்?" என்று வண்டில்காரனிடம் கேட்டார். சார் நீங்கள் அதைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. வேகமாகப் போ என்றீர்கள் அவ்வளவு தான்" என்றார் அவர். அதன் பின் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

ஜனஸ்டின் இருந்தாரல்லவா? ஒரு முறை பரீஸிற்குப் போனார்.ஒரு ஆடம்பரமான விடுதியில் தங்கினார். மாலைநேரம் ஊரைச் சுற்றிப் பார்க்கலாம் என்று ஆசைப்பட்டு வெளியே சென்றார். வேடிக்கை பார்த்துக் கொண்டே நீண்டதூரம் வந்து விட்டார். திரும்பி வருவதற்கு வழி தெரியவில்லை. அதுமட்டுமல்ல தான் தங்கியிருக்கும் விடுதி எது என்பதையும் மறந்துவிட்டார். வழியில் போவோர், வருவோரை நிறுத்தி "சார் நான் தங்கியிருக்கும் விடுதி எதுவென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்.

அவர்கள் எல்லோரும் இவரை ஒரு மாதிரியாகப் பார்த்து விட்டு விலகிப்போக ஆரம்பித்து விட்டார்கள். ஒரு நகைச்சுவைக்காரர் இவரைப் பார்த்து "அது சரி உங்கள் பெயர் என்னவென்று நினைவிருக்கிறதா? " என்று விளையாட்டாகக் கேட்டார் உடனே இவர் "அது எனக்கு நினைவுள்ளது ஜன்ஸ்டின்" என்றார்.

அப்போதெல்லாம் இவரது பெயர் உலகம் முழுதும் பிரபலமாக இருந்தது. யெரைக்கேட்டவுடன் அந்த ஆள் இவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு பொலஸின் உதவியுடன் இடத்தைக் கண்டுபிடித்து கூடவே அழைத்துச் சென்றுவிட்டார். இது போல் பெரிய மேதைகளுக்குத்தான் ஞாபகமறதி என்றில்லை. சாதாரண மக்களுச் ும் இது இருப்பது உண்டு.

நமது ஆள் ஒருவர். அவருக்கு அடிக்கடி ஞாபக மறதி. ஒருவரிடம் போய "டாக்டர் எனக்கு ஞாபக மறதி அதிகமாக இருக்கிறது. இதற்கு ஏதாவது மருந்து கொடுங்கள்" என்றார். அவர் மெதுவாக இவரைப் பார்த்து "நான் டாக்டர் இல்லை. வக்கீல்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை நிலைக்குமா என்பது கேள்விக்குறியே!

## காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்குள் தற்போது காணப்படுகின்ற முரண்பாடுகளை நோக்கும் போது சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவை நிலைக்குமா என்பது கேளவிக்குறியாகவே உள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் கட்சி பேதமின்றி தேசியக் கொள்கை ஒன்றை அமைத்து அதன்படி செயற்பட வேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் ஆர்வம் உண்டு ஆனால் அரசாங்கம் தான் சமாதானச செயற்பாடுகளை இழுத்தடித்துக் கொண்டிருக்கின்றது.

புலிகள் தமது ஈழக் கோரிக்கையைக கைவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடாத்த முன்வந்துள்ளனர் அதனை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆயுதங்களைத் தூக்கிக் கொண்டு சென்று காட்டுக்குள் இருபபதால் தமது மக்களுக்கு விடிவு பிறக்காது என்பதைப் புலிகள் உணர்ந்து கொண்டார்கள்.

அதனால் தான் அவர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடாத்த முன்வந்துள்ளனர். இதனை நாம் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும். புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையை நாம் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளவில்லை. எனினும், அநதயோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை நடாத்த வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம்.

இதை விடுத்து அரசு ஏற்படுத்தியுள்ள சமாதான ஆலோசனை சபை பிரயோசனமற்றதொன்று. அந்தச் சபையை நாங்கள பிரதிநிதித்துவப்படுதத மாட்டோம். அதற்காக நாங்கள் அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவற்றவர்கள் என்று தப்பபிப்பிராயம் கொள்ளக்கூடாது.

அரசாங்கத்திற்குள சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக தெளிவான ஒரு நிலைப்பாடு முதலில ஏற்படவேண்டும். ஐக்கிய தேசியக்கட்சி நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக உண்மையாகச் செயற்பட்டது இதனாலேயே போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் ஏற்படுத்தியது.

அதனால்தான் நாடு இன்று யுத்த சூழ்நிலையில் இருந்து மாறுபட்டுள்ளது. ஜனாதிபதி கூட யுத்த நிறுத்த உடன்படிகையை ஏற்றுக்கொண்டுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-121)

# இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் முஸ்லிம் தனித்தரப்பை வலியுறுத்துமாறு பல்வேறு தரப்பினரிடமும் கோரிக்கை

(மலேசியா)

இலங்கையின் இனப்பிரச்சினைகளுக்கான தீர்வு முயற்சிகளில் முஸ்லிம் சமூகத்தினருக்கான அந்தஸ்தைப் பெறுவதற்குத் தேவையான அழுத்தங்களை இஸ்லாமிய நாடுகள் வழங்குவதற்கு மலேசிய நாட்டு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை விடுகக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

ஜனநாயக ஐக்கிய முன்னணியின் குழுவினர் மலேசியாவில் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் நஸீர் ஆவ் குஸைனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்திய போதே இது குறித்த வேண்டுகோள் கட்சியின் செயலாளர் காபீர் நஸீம் அஹமட்டால் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பாதிப்புக்கள் குறித்து சர்வதேச நாடுகளுக்குத் தெளிவுபடுததும் ஒரு கட்டமாகவே இப் பேச்சுவார்த்தை ஒழுங்குபடுத்தப்பட்டது.

கடந்த கால யுத்த சூழ்நிலையில் முஸ்லிம் சமூகம் பாரிய பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்துள்ள நிலையில், நிரந்தர சமாதானத்திற்காகத் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் சுதந்திரமாக,தனித்தரப்பாகப் பங்கு பற்றித் தமது பாதிப்புக்களை வெளிப்படையாக எடுத்துக் கூறுவதற்கும், அதற்கான தீர்வினைப் பெறுவதற்கும் எதிர்பார்க்கின்றது என அவர் அங்கு வலியுறுத்தினார்.

அத்துடன், சர்வதேச நாடுகளால் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு ,புனரமைப்பு மற்றும் மனிதாபிமானப் பணிகளில் முஸ்லிம் சமூகம் திருப்தியடையவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-121)

# இராசி பலன்

**14.10.2004**

**(புரட்டாதி 28, வியாழக்கிழமை)**

**அமாவாசை மு.ப. 08.59 மணிவரை**

**சித்திரை பின்னிரவு 02.22 மணிவரை**

**இராகுகாலம் 1.32- 3.02 மணிவரை**

**சுபநேரம் 07.32 - 09.02 மணிவரை**

**சித்தாமிர்தம், நவராத்திரி விரத ஆரம்பம்.**

**மேடம்** சென்ற இடத்தில் செல்வாக்கு, எடுத்த கருமங்கள் கைகூடும், தொழில் வருமானம், உடல் நலம்.

**இடபம்** சத்துரு ஜெயம், காரிய அனுகூலம், செய்தொழில் முன்னேற்றம், போசன நன்மை.

**மிதுனம்** சிறுவியாதி, மனச் சோர்வு, வியாபார நன்மை, சொத்துப் பிணக்கு.

**கடகம்** பகைவரால் பயப்படுதல், வேலைப் பளு, இனசனத் தொடர்பு, முயற்சி தாமதம்.

**சிங்கம்** சகோதரர் உதவி, பிரயாண நன்மை, காரிய அனுகூலம், அந்நியர் சந்திப்பு.

**கன்னி** மாதர் நட்பு, வீண் விவாதம், அதிக செலவு, வேலைச் சுமை.

**துலாம்** தேக நலன், சயன சுகம், தெய்வ தரிசனம், காரிய சித்தி.

**விருச்சிகம்** காரிய அலைச்சல், உறவினர் மனஸ்தாபம், தெய்வ சிந்தை, சயன சுகக் குறைவு.

**தனுசு** தெய்வ தரிசனம், பெருமையடைதல், நல்ல வரவேற்பு, காரிய அனுகூலம்.

**மகரம்** அதிக பிரயாசை, தூரதேசச் செய்தி, முயற்சி கைகூடும், புதிய திருப்பம்.

**கும்பம்** ரோக நிலை, புதிய திட்டமிடல், பிதா சிந்தை, காரிய தாமதம்.

**மீனம்** ரோக நிலை, காரிய தடங்கல், வீண் பிரச்சினை, தனவிரயம்.

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்**

# மேஜர் ஜெனரல் சிசிர குமார கைதாகி பிணையில் விடுதலை

## கட்டாய விடுமுறை வழங்கவும் தீர்மானம்

(கொழும்பு)

இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சிசிர குமார விஜயசூரிய நேற்று முன்தினம் லஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். கடந்த திங்கட்கிழமை கொழும்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பிணையிலும், பத்து இலட்சம் ரூபா சாரப்பிணையிலும் இவரை நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்தது.

இது தவிர, இவ் விசாரணைகள் முடியும் வரை நாட்டை விட்டு வெளியேறுவதற்கும் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

கடந்த 1997ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இவர் 19இலட்சம் ரூபாவினை செலவு செய்துள்ளதாகவும், இது இவரது வருமானத்தை விட மிகவும் அதிகம் என்றும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கு திருப்திகரமான பதிலினை அளிக்க முடியாத நிலையில் இவர் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இது தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 13ஆம் திகதி வரைக்கும் பிற்போடப்பட்டுளளன.

இதேவேளை,சிசிர விஜயசூர்யவை கட்டாய விடுமுறையில் வேலையிலருந்து நீக்கும்படி கோரி இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட பாதுகாப்பு அமைச்சிற்கு சிபாரிசு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

எதர்வரும் 2005ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி தனது 55ஆவது வயதை முடிக்கும்போது ஓய்வு பெறவுள்ள சிசிர விஜயசூர்ய, விஜயபாகு படையணியின் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றி வந்தார். சாந்த கொட்டேகொடவின் அவசர அறிவித்தலின்படி, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலவும், மேஜர் ஜெனரல ஜி.டபிள்யூ. ஜயசுந்தரவும் சிசிர விஜயசூர்யவின் பணிகளை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனவரி மாதத்தில் ஓய்வு பெறும்வரை சிசிர விஜயசூர்யவை கட்டாய விடுமுறையில் செல்ல அனுமதிக்கும்படியே இராணுவத்தளபதி சாந்த கொட்டேகொட கோரியுள்ளார்.

கடநத 1997 லிருந்து 2001ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக குள் 1.9 மில்லியன் ரூபா பண மோசடி மற்றும் லஞ்ச ஊழலில் விஜயசூர்ய ஈடுபட்டிருந்தமை நீதிமன்றத்தில் வெளியானதையடுத்தே இத்தகைய அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-121)

# நவராத்திரிப் பாமாலை



துர்க்கை துதி

## புதுயுகம் காக்க

சீறி வரும் சிங்கத்திலே
ஏறி வரும் துர்க்காதேவி
மாறி வரும் புதுயுகத்தை
மாண்புடனே காத்திடுவாய்

தி.மயூரகிரிசர்மா
தரம் - 10
அத்தியார் இந்துக் கல்லூரி.

## காப்பவள்

வீரம் தருபவள் துர்க்கா
அவள் நெற்றித் திலகம்
வெற்றியைத் தரும் மங்களம்
எம்மைக் காப்பவளும் அவளே

சி.தனுஸ்ரிக்கர்
தரம் -06
இந்து மகளிர் பாடசாலை.

## களிப்பே வருகுதம்மா

கையிலுள்ள ஆயுதங்கள்
கவலையைப் போக்குதம்மா
கை கூப்பி வணங்கிடவே
களிப்பே வருகுதம்மா

க.தரிசோ
தரம் -12
ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

# மக்களின் நெருக்கடிக்கு மத்தியில் பதவி வழங்கல்கள் தேவையற்றவை

## ஐ.தே.க.கண்டனம்

(கொழும்பு)

மக்கள் நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ள வேளையில், கூட்டமைப்பு அரசாங்கம், அதன் உறுப்பினர்களுக்கு அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர் பதவிகளை வழங்குவதனை வன்மையாகக் கண்டித்து, ஐக்கிய தேசியக் கட்சி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அக்கட்சி வெளியிட்டுள்ள அவ்வறிக்கையில், போலி வாக்குறுதிகளால் முழுநாட்டையும் ஏமாற்றிய கூட்டமைப்பு அரசாங்கம், மேலும் நான்கு உறுப்பினர்களுக்குத் தற்போது பிரதியமைச்சர் பதவிகளை வழங்கியுள்ளது.

புதிய அரசு பதவிக்கு வந்த அறுமாத காலப் பகுதிக்குள் அத்தியாவசியப் பொருட்கள், சமையல் எரிவாயு மற்றும் எரிபொருள் ஆகியவற்றின் விலைவாசிகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன.

அமைச்சர் மற்றும் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கையினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தேர்தல் பிரசாரத்தின் போது குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், அமைச்சர்களின் தனிப்பட்ட உத்தியோகஸ்தர்கள், அவர்களுக்கான வாகனங்கள் மற்றும் அமைச்சர்களுக்கான வெளிநாட்டுப் பயணங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதாகத் தெரிவித்த போதும், தற்போது அரசு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் செயற்படுகின்றது.

எனினும், கூட்டமைப்பின் தோழமைக் கட்சியான ஜே.வி.பி. இவை குறித்து எவ்விதக் கருத்துக்களையும் தெரிவிக்காது இருப்பது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சி வியப்படைந்துள்ளது எனவும குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-121)

# முஸ்லிம்களின் பாதுகாப்பில் இருந்தே கருணா செயற்பட்டு வருகிறார்

## மட்டு-அம்பாறை அரசியல்துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டு - அம்பாறை மாவட்டங்களில் சில முஸ்லிம் அரசியல் கட்சி ஆதரவாளர்களின் பாதுகாப்பில் இருந்து கொண்டே கருணாவும் அவரது குழுவினரும் செயற்பட்டுவருவதாக விடுதலைப் புலிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

அக்கரைப் பற்றில் கடந்த சனிக்கிழமை நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வீரச்சாவடைநத கப்டன் ஜட்டின் கொலையைக் கண்டித்து மட்டு- அம்பாறை அரசியல்துறை வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியத்தைக் காட்டிக் கொடுத்து, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சிதைக்கும் செயலில் இறங்கியிருக்கும் கருணாவின் குழுவைச்சேர்ந்த வித்தகனால் கப்டன் ஜீட் கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் கருணாவும் அவரது குழுவினரும், மட்டு- அம்பாறை மாவட்டங்களில் சில முஸ்லிம் அரசியல் கட்சி ஆதரவாளர்களின் பாதுகாப்பில் இருந்து கொண்டு இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதனைச் சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்ட விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டிப்பதாக அவ் வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இக் குழுவினர் சகோதர தமிழ்-முஸ்லிம் சமூகத்தினருக்குள் முரண்பாட்டினை ஏற்படுத்தி, அரசியல் இலாபம் தேடுகின்றனர். இதன் மூலமாக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளையும் அவர்கள் குழப்ப முற்படுகின்றனர்.

எனவே, இது தொடர்பில் அனைத்துத் தரப்பினரும் விழிப்பாக இருந்து, தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்பி சமாதானத்தை முன்னெடுக்க வழிசமைக்கவேண்டும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-121)

# கடைத்தொகுதி திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செங்குந்தா பொதுச் சந்தைப் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்படடுள்ள கடைத் தொகுதி நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இக் கடைத்தொகுதியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் வைபவ ரீதியாகத் திறந்து வைப்பார்.

இவ் வைபவத்தில் முன்னாள் முதல்வர்கள், ஆணையாளர்கள், யாழ்.மாவட்டப் பாராளுமன்று உறுப்பினர்கள், தமிழீழ அரசியல் துறைப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். ((ந)

# 1996 இல் யாழில் படையினரால் கைதாகி காணாமல்போன 6 பேர் குறித்த விசாரணை டிசெம்பர் ஏற்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கடநத 1996 ஆம் ஆண்டு காலப் பகுதியில் யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனோர் தொடர்பான எட்டு வழக்குகள் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எல்.வரதராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குறித்த இரண்டு வழக்குகளில் காணாமற் போனவர்களாகக் குறிப்பிட்டிருந்த நாவற்குழி மேற்கைச் சேர்ந்த சிவகுரு தங்கத்துரை, நாவற்குழி தெற்கைச் சேர்ந்த பொன்னையா ஜெயராஜா ஆகியோர் தொடர்பான வழக்குகளில் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருந்தவரும், நாவற்குழியில் குறித்த காலத்தில் இராணுவப் பொறுப்பதிகாரி யாக விருந்தவருமான லெப்ரினன்ற் கேணல் டுமிந்த கெப்பிற்றிவலான மற்றும் லெப்ரினன்ற் ஜெனரல் பல்லேகல ஆகியோர் சார்பில் அரச சட்டவாதி ஆட்சேபனை மனுக்களைத் தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி எம்.றெமீடியனின் அனுசரணையுடன் ஆஜரான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தியும், அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமியும் தங்கள் தரப்பு வாதங்களை சமர்ப்பித்தனர்.

இவர்களின் வாதங்களைக் கேட்ட நீதிபதி, குறித்த இரண்டு ஆட்கொணர்வு மனுக்களில் காணாமற் போனதாகக் குறிப்பிடப்பட்ட நபர்கள் குறித்து முதற்தோற்ற வழக்கு இருப்பதாக நீதிமன்றம் திருப்தியடைவதன் காரணமாக இவ்வழக்குத் தொடர்பான முழு விசாரணையையும் மேற்கொள்வதற்குச் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்திற்கு இவ் வழக்குகளை அனுப்பும் படியும், வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அது பற்றிய அறிக்கையொன்றை யாழ்.மேல் நீதிமன்றுக்கு அனுப்பி வைக்குமாறு சாவகச்சேரி நீதிவானுக்குக் கட்டளையிட்டார்.

மேலும், இவ் வழக்குகளின் இரண்டு முறைப்பாட்டுக்காரர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நீதிபதி கட்டளையிட்டார்.

இதேவேளை, மேற்படி காலப் பகுதியில் காணாமல்போன தம்பன பாஸ்கரன் (கைதடி வடக்கு), பற்றிக் மேரிரவி (யாழ்.மத்தியூஸ் றோட்), தேவதாஸ் சுரேஸ்குமார் (யாழ்.மத்தியூஸ் றோட்), செல்லையா பரமநாதன் (அரியாலை), செல்லத்துரை குமா[illegible] (குருநகர்), ஆறுமுகம் சிவாஜினி (கொழு[illegible]புத்துறை) ஆகியோர் குறித்தவழக்குகளிலும் எதிர் மனுதாரர்கள் சா[illegible] ஆட்சேபனைகளைச் சமர்[illegible]தற்காக எதிர்வரும் டிசம்பர் ம[illegible]தம் 6 ஆம் திகதிக்கு நீதிபதி வழக்குகளை ஒத்திவைத்தார். (ந-19,43)

# திருட்டு

(கல்லியங்காடு)

கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு அயலில் உள்ள வீட்டினுள் யன்னல் கம்பிகளை உடைத்து இறங்கிய திருடர்கள் வீட்டிலிருந்த 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி இடம் பெற்ற இச் சம்பவத்தால் அப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (ப-74)



கடந்த 1987 ஆம் ஆண்டு கொக்குவில் பிரம்படிலேனில் வைத்து இந்திய இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 40 அப்பாவிப் பொது மக்களதும், 17 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நடைபெற்றது. அந் நிகழ்வில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவிழி, நல்லூர் அரசியல் துறைப்பொறுப்பாளர் செழியன் ஆகியோர் பொதுச் சுடர் ஏற்றி வைப்பதையும், நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரனும் மாணவி ஒருவரும் ஈகைச்சுடர் ஏற்றிவைப்பதையும், இறந்தவரது உறவினர் ஒருவர் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவிப்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் :- ஐங்கரன்)

# கொழும்பு கம்பன் கழகத்தின் 'ஆடல் வேள்வி' நிகழ்வு

கொழும்பு கம்பன் கழகம் ஆண்டுதோறும் முத்தமிழுக்கு விழா எடுத்து வருகின்றது. இவ் விழாக்களின் வரிசையில் 2004 ஆம் ஆண்டுக்குரிய நாட்டிய விழா எதிர்வரும் 15,16,17 ஆம் திகதிகளில் (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தினங்களில் கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 6.00மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

'நிருத்தோற்சவம்' எனும் பெயரிலான இவ் ஆடல்வேள்வியினை உச்சநீதிமன்ற நீதியரசரும் கொழும்புக் கம்பன்கழகப் பெருந் தலைவருமான மாண்புமிகு சி.வி. விக்னேஸ்வரன் தொடக்கி வைக்கவுள்ளார்.

முத்தமிழுக்கும் விழாவெடுக்கும் முறைமையில் இவ்வாண்டு நாட்டிய விழாவினை எமது கொழும்புக் கம்பன் கழகம் வழமைபோல் மிகச்சிறப்புற அமைத்துள்ளது.

திருமதி நிர்மலாஜோன், திருமதி சிவானந்தி ஹரிதர்ஷர், திருமதி




சிவகுமாரி ஞானேந்திரன், திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் ஆகியோரின் மாணவர்கள் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். தனி நடனங்களாகவும், நாட்டிய நாடகங்களாகவும், பல நிகழ்வுகள் மேடையேறவுள்ளன.

பெற்றா எசன்ஸ் நிறுவன பங்காளர் மு.கந்தவேள், ஜனாதிபதி சட்டத்தரணி ஏ.ஆர்.சுரேந்திரன், தமிழ்மாதர்சங்க முன்னைநாள் தலைவி திருமதி இந்திராயோகராஜன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழா நிகழ்வுகளை தினந்தோறும் ஆரம்பித்து வைக்கவுள்ளனர். வவுனியா மேல் நீதிமன்ற நீதியரசர் மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன், மூத்த நடனவல்லுநர் திருமதி திரிபுரசுந்தரி யோகானந்தம் ஆகியோர் தொடக்கவுரையாற்றி விழாவைச் சிறப்பிக்கவுள்ளனர். விழா நிகழ்ச்சிகள் சரியாக மாலை 6.00 மணி தொடக்கம் 8.30 மணி வரை நடைபெறும்.

இயல், இசை, நாடகம் எனப் பிரிவுபட்ட நம் தமிழ்மொழியின் முக்கூறுகள் ஆழ்ந்த பெருமை கொணடன. வெறும் கலை வடிவங்களாக அன்றி ஈடுபடுவாருக்கு உலகியல் வாழ்வொழுக்கங்களையும், ஆன்மஈடேற்றப் பயன்பாட்டினையும் இம்முத்தமிழ்கள் தரவல்லன. பல்லாயிரமாண்டுகளாய் நம் சான்றோர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட நம் முத்தமிழ்த் துறைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பது இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமான பணியாகும்.

ஆழமற்ற மேற்குலக நாகரிக பாதிப்பும், மேற்கத்தைய கலை வடிவங்கள் மீதான ஈடுபாடும் இன்றைய இளைய தலைமுறையினரைப் பெரிதும் ஈர்த்து நிற்பதால், இன்றைய இளைஞர்களுள் பெரும்பாலானோர் தமிழின் அழமான விழுமியங்களை அறியாதவர்களாகவே இருக்கின்றனர். அறியாமையால் அவர்கள் மனதில் தமிழ்ன் மேலான மதிப்பு குன்றிவருகின்றது. தம்தாயமொழியின்மேல் ஈடுபாடற்று பிறமொழிகளில் ஈர்ப்புக்கொண்ட ஒரு புதியதலைமுறையினரின் வளர்ச்சி கண்டு அறிஞர்கள் அதிர்ந்து நிற்கின்றனர். இளைய தலைமுறையினரை பிறமொழி, நாகரிக மோகங்களிலிருந்து மீட்டெடுத்து தமிழின்பால் ஈடுபடுத்த வேண்டியது இன்றையகாலத்தின் கட்டாய பணியாகும்.

தமிழின் தனித்துவம் பேணவும் தமிழினத்தின் தனித்துவம் பேணவும் முயன்று நிற்கும் ஈழத்திமிழினம் தமிழின் பாரம்பரிய பெருமையைக் காக்கும் கடமைப்பாட்டோடு நிற்கிறது. நாட்டின் போர்ச்சூழ் நிலையால் உலகெலாம் பரவிவிட்ட ஈழத் தமிழினத்தாரே இன்று உலகளாவிய ரீதியில் தமிழ்த் தாயின் முதன்மை உரிமையாளராய்க் கருதப்படுகின்றனர். இந் நிலையில், தம் தாய் மண்ணிலும், பரவி வாழும் நாடுகளிலும் தமிழன் பெருமையை எடுத்துக்காட்ட வேண்டிய கடப்பாடு எம் இனத்துக்கு உள்ளது. நம் ஈழத்தமிழ் தாய் மண்ணில் முத்தமிழும் ஆழப்பதிந்தாலே தமிழ்த்தாயின் வளர்ச்சி உலகெலாம் செழிக்கும் இவ்வுண்மையை உணர்ந்து முத்தமிழுக்கும் கழகம் ஆண்டு தோறும் விழாவெடுத்து வருகிறது.

கட்புல கலைவடிவாயமைந்த நடனக்கலை, மற்றைய இயல், இசை வடிவங்கள் போலன்றி மேடையேற்றத்துக்கு அதிகளவு பொருட் செலவினை ஏற்படுத்துகின்றது. இன்றைய சூழ்நிலையில் நாட்டிய அரங்கேற்றம் என்பது பெரும் செல்வந்த குடும்பத்தினரால் மாத்திரமே சாத்தியப்படும் ஒன்றாக ஆகிவிட்டது. இலட்சக் கணக்கில் செலவு செய்து அரங்கேற்ற முடியாத பல ஆற்றல்மிக்க நாட்டியமாணவர்கள் மேடையேறும் வாய்ப்பின்றி வருந்தி நிற்கும் சூழ்நிலையில் கொழும்புக் கம்பன்கழகம் நடாத்தும் இந் நாட்டிய வேள்வி அனைத்து மாணவர்க்கும் மேடையேறும் பெரும வாய்ப்பைத் தந்து அவர்களை ஊக்கப்படுத்துகிறது. □

நவராத்திரி தினங்களுள் அமைகின்ற இவ் ஆடல் வேள்வியில் ஈழத்தின் தலைசிறந்த நடன நிறுவனங்களான கலைக்கோயில் நடனப்பள்ளி, தியாகராஜ கலைக் கோயில் (திருகோணமலை), நிர்மலாஞ்சலி நடனப்பள்ளி, நிருத்தனா கலாமன்றம், அபிநயா நடனபள்ளி, நாட்டியக் கலாமந்திர் ஆகியவை கலந்து கொள்கின்றன. இந்நிறுவனங்களை நடாத்தி வருகின்ற நாட்டிய வல்லுநர்களான திருமதி லீலா செல்வராசா, திருமதி பவானி குகப்பிரியன் ,

## சரஸ்வதி பாமாலை

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் நவராத்திரி விழாவை முன்னிட்டு சரஸ்வதி பாமாலை அடங்கிய நூலை அச்சிட்டு பாடசாலைகள் தோறும் இலவசமாக விநியோகித்து வருகிறது.

இவ் சர்ஸ்வதி பாமாலை அடங்கிய நூல் இந் நவராத்திரி விழா காலத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற நோக்கிலேயே அது விநியோகிக்கப்படுகிறது. (ப-35)

## பொழுது போக்கு மையம்

(மருதங்கேணி)

தேசிய வை.எம்.சி.ஏ.உதவியுடன் துன்னாலை கலிகைச் சந்தியிலுள்ள பருத்தித்துறை வை.எம்.சி.ஏ.கட்டடத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறார்களின் நன்மை கருதி பொழுது போக்கு நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை வை.எம்.சி.ஏ.யின் யாழ்.மாவட்ட உரிமைகளுக்கான பிராந்திய ஒருங்கிணைப்பாளர் ரி.சி.பிளவுன்சன சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந் நிலையத்தில் விளையாட்டு சம்பந்தமான கருத்தரங்குகள், பயிற்சிகள், பட்டறைகள் என்பன நடைபெறுகின்றன. (ப)

## மீண்டும் மாட்டிறைச்சி

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் மாட்டிறைச்சி வியாபாரம் நடைபெற்று வருகிறது.

மாடுகளுக்கு கால்வாய் நோய் பரவிவந்ததைத் தொடர்ந்து கடந்த மூன்று மாதங்களாகப் பூட்டப்பட்டு இருந்த மாட்டிறைச்சிக் கடைகள் மீண்டும் திறக்கப்பட்டு வியாபாரம் நடைபெற்றுவருகின்றன. (ப-35)

## 'ஜனாதிபதிக்கு அடுத்த பதவி எனக்குத்தான்'

# தனது நிலையை உறுதிப்படுத்த பிரதமர் கூறும் கூற்று இது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் தொடர்ந்தும் நீடிக்கப்படலாம். அவர் மூன்றாவது முறையாகவும் ஜனாதிபதியாக நியமிக்கப்படலாம்.

ஆனால், ஜனாதிபதிக்கு அடுத்த படியான இரண்டாவது தலைவர் பதவி எனக்குத்தான் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை தனது நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் மேலும் நீடிக்கப்படும் சாத்தியம் உள்ளது. இப்போது இரண்டாவது தலைமைத்துவம் தன்னுடையதே-என்று பிரதமர் கூறிவருகிறார்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு முடிவடைகின்றது. அதனை மேலும் நீடிப்பதற்கு ஏற்ற வகையில் அரசியல் அமைப்பை மாற்றுவதற்கு பாராளுமன்றம் அனுமதித்தால் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்படும் என்ற ஊகமொன்றுக்கு அளித்த பேட்டியில் பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

பிரதமரின் கருத்துக் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இதுவிடயம் குறித்துத் தெரிவிக்கையில்,

தனது நிலையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இந்தப் பட்டத்தினைப் பிரதமர் பறக்கவிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதனால் பாராளுமன்றத்தில் முன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் வேண்டும்.

அத்துடன், சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

இந் நிலையில், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தனது நிலையை உறுதிப்படுத்தும் முகமாகவே அவர் இந்த பட்டத்தினைப் பறக்கவிட்டுள்ளார் எனக் குறிப்பிட்டார். (ந-121)


# கேள்வி கோரல்

## யாழ்ப்பாணத் தொல்லியல் நூதனசாலைக் கட்டடத் திருத்தவேலை

**15.09.2004 ஆம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரமான மேற்படி கேள்வி கோரலில் பிரசுரிக்கப்பட்ட திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட் டுள்ளன.**

**கேள்விப் படிவங்களை 2004.10.22 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.**

**கேள்விகள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப்பிரதிகளில் 2004.10.24 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

**செ.பத்மநாதன்,**
**அரசாங்க அதிபர்,**
**யாழ் மாவட்டம்.**

(C/634)


# வெலிகந்த சூட்டுச் சம்பவம் யுத்த நிறுத்த மீறலாகாதாம்

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டம் வெலிகந்தப் பகுதியில் கருணாகும்பலைச் சேர்ந்தவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் யுத்த நிறுத்த மீறல் என ஏற்க முடியாது என வட மத்திய மாகாண பிரதி பொலிஸ மா அதிபர் ஜயந்த கமகே கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த சம்பவத்திற்கு விடுதலைப் புலிகள் உரிமை கோரியிருப்பது பற்றி தனக்கு எதுவும் உத்தியோக பூர்வமாகத் தெரியாது என்றும் அவர் ஊடகமான்றிற்குக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர் மாங்கேணியைச் சேர்ந்த நியூட்டன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் கைது செய்யப்படும் பட்சத்தில் வழமையான குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார் எனவும், கொலைச் சம்பவங்களைப் பொறுத்தவரை அப் பிரதேசத்தில் பல இடம் பெற்றுள்ளன. இது விடுதலைப் புலிகளுக்கிடையிலான பிரச்சினை என்பதால் இதனை யுத்த நிறுத்த மீறல் என்று ஏற்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில், வெலிகந்த நாகஸ்தன்ன பிரதேசத்திற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேரில் சென்று விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளையும் சந்தித்த இவர்கள் அப் பிரதேச மக்களிடமும் சம்பவம் தொடர்பாகக் கேட்டறிந்ததோடு தாக்குதலுக்கு இலக்கான வீட்டையும் பார்வையிட்டனர். (ற)

# அப்துல் காதரை விடுவிக்குமாறு பௌத்த பிக்குகள் கோரிக்கை

(கொழும்பு)

ஊழல் மோசடி குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் காதரை விடுவிக்குமாறு பௌத்த பிக்குகள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

அஸ்கிரிய பீடமகாநாயக்கர் உடுகம சிறி புத்தரகித்த தேரர் தலைமையிலான 300 பௌத்த பிக்குகள் இது குறித்து கையொப்பமிடப்பட்ட கடிதமொன்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சர் அப்துல் காதர், சிறந்த மனிதரெனவும், மக்களுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசியலவாதியெனவும் தெரிவித்துள்ள பௌத்த பிக்குகள், அவரை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற)

# சத்துணவுத்திட்டத்தை மேலும் விரிவாக்க தீர்மானம்

(மருதங்கேணி)

உலக உணவுத்திட்டத்தின் கீழ் வடக்கு - கிழக்கு மாகாண பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள சத்துணவுத்திட்டம் மேலும விஸ்தரிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள 120 பாடசாலைகளில் அமுலபடுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 24 ஆயிரம் மாணவர்கள நன்மையடைந்து வருகின்றனர்.

எனினும், இத்திட்டத்தை மேலும் விரிவுபடுததத் திட்டமிடப்பட்டுள்ளது. அந்த அடிப்படையின பிரிவுகளிலும் 508 பாடசாலைகளில் இத்திட்ட விரிவுபடுத்தப்படவுள்ளது.

இதனால் ஒரு இலட்சம் மாணவர்கள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

# அரோன் பியர்சோல், நீச்சலில்

# புதிய உலகசாதனை படைத்தார்

அமெரிக்க நீச்சல் வீரரான அரோன் பியர்சொல், 200 மீற்றர் **Back Stroke** நீச்சல் போட்டியில் முன்பு



தன்னால் ஏற்படுத்தப்பட்ட சாதனையை முறியடித்துள்ளார்.


கடந்த திங்கட்கிழமை நியூ யோர்க் கிழக்கு மெடோ நகரில் நடைபெற்ற **Short Course** சம்பியன்ஷிப் போட்டியிலேயே அவர் புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

கடந்த மாச் மாதத்தில் அவர் ஏற்படுத்தியிருந்த சாதனை, 200 மீற்றர் தூரத்தை 1நிமிடம் 50.64 விநாடிகளில் நீந்திக் கடந்தார். தற்போது 1 நிமிடம் 50.52 விநாடிகளில் நீந்திக் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

இப் போட்டியில் இரண்டாம் இடததைப் பெற்ற அவுஸ்திரேலிய வீரர் மத்தியூ வோல்ஷ் 1நிமிடம் 52.54 விநாடிகளிலும் மூன்றாவது இடம்பெற்ற ரஷ்ய வீரர் ஆர்க்டி வியாற்ஷெனின் 1நிமிடம் 54.20 விநாடிகளிலும் நீந்திக் கடந்தனர்.

இது தவிர 4x100 மீற்றர் மெட்லே அஞ்சல் நீச்சல போட்டியிலும் பியர்சொல் பங்குபற்றி த ஙது அணி உலக சாதனை ஏற்படுத்த உதவினார். முன்னைய சாதனையான 3 நிமிடம் 25.38 என்ற நேரத்தை முறியடித்து, 3 நிமிடம் 25.09 விநாடிகளில் நீந்திமுடித்து இப்புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டது.

இந்த அஞ்சல் நீச்சல் அணியில் பியர்சொல்லுடன் பிரன்டன் ஹென்சன், இயன் குரோக்கர் மற்றும் ஜேசன் லிஷாக் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். (ப-7)



**இன்று சென்னை சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கும் இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக இரு அணி வீரர்களும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். டெண்டுல்கர் இப் போட்டியில் விளையாடாதது சென்னை ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கும். அதேவேளை, முரளியின் உலக சாதனையை இப் போட்டியில் அவுஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேர்ன்வோன் முறியடிப்பாரென அனைத்துக் கிரிக்கெற் ரசிகர்களும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.**

# ஜப்பான் ஓபன் டென்னிஸ்

# ஜிரி நோவாக் சம்பியன்

ஜப்பான ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் செக் குடியரசைச் சேர்ந்த ஜிரி நோவாக் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளார்.

ஜப்பான் தலைநகரான டோக்கியோவில நடைபெற்ற இப் போட்டியில் செக் வீரர் நோவாக்கும், அமெரிக்க வீரர் டெய்லர் டென்டும் மோதினர்.

செக்.வீரரான நோவாக, அரையிறுதியில் உலக முன்னாள் முதல்தர வீரரும் 2002ஆம் ஆண்டு விம்பிள்டன் சம்பியனுமான அவுஸ்திரேலியாவைச்சேர்ந்த லெய்டன் ஹெவிட்டை வீழ்த்தி இறுதிப் போட்டிகுத் தகுதி பெற்றார். இறுதிப் போட்டியில் 5ஆம் நிலை வீரரான நோவாக் 5-7,6-1,6-3என்ற கணக்கில் அமெரிக்க வீரர் டெய்லரை வீழ்த்தி பட்டம் வென்றார்.

இரண்டாவது மற்றும் 3ஆவது செற்றில் நோவாக் ஒரு வித்தியாசமான வீரராக மாறிவிட்டார். இரண்டாவது செற்றில் நோவாக் கின் ஆட்டம் மிகச் சிறப்பாக இருந்தது. இவரது மின்னல் வேக ஆட்டத்திற்கு டெய்லரால் ஈடுகொடுத்து ஆடமுடியவில்லை. எனவே அவர் அடிக்கடி தவறுகளைப் புரிந்தார். பின்பு நோவாக 6-1என்ற கணக்கில் 2வது செற்றை கைப் பற்றினார். பின்பு வெற்றியைத் தீர்மானிக்கக்கூடிய மூன்றாவது செற்றில் டெய்லர் சிறிது தாக்குப் பிடிதது ஆடிய போதும் நோவாக்கின் முன் னேற்றத்தைத் தடுக்க முடிய வில்லை. 4ஆவது சுற்றில் மட்டும் டெயலர் நோவாக்கின் ஆட்டத்தை முறியடித்து புள்ளிகள் பெற்றார். பின்னர் நோவாக் தொடர்ந்து நன்கு ஆடி 6-3என்ற கணக்கில் 3ஆவது செற்றில் வென்றார்.

கடந்த வருடம் கஸ்டாட் நகரில் நடந்த போட்டியில் நோவாக் பட்டம் வென்றார். அதன்பிறகு நீண்ட இடைவெளியில் அவர் பெறும் முதலாவது பட்டம் இதுவாகும்.

1996ஆம் ஆண்டு ஒக்லாந்துப போட்டியின் மூலம் நோவாக் தனது முதலாவது பட்டத்தை வென்றார். பின்பு கடின ஆடுகளத்தில் அவர் பெறும் பட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது உலக தரப்பட்டியலில் 28ஆம் நிலை வீரராக இருக்கும் நோவாக், கடந்த 2 வருடததிற்கு முன்பு தான் பிடித்த 5ஆவது இடத்திற்கு முனனேற குறிவைத்திருக்கிறார். இந்த வெற்றி குறித்து நோவாக் கருத்துத் தெரிவிக்கையில் நான் ஒற்றையர் பிரிவில் 5 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறேன். இது எனக்கு 6ஆவது பட்டமாகும். இப்பட்டம் வென்றது எனக்கு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளித்துள்ளது என்று கூறினார். (ப-7)

# வருடாந்த ஸ்கிறபிள்

# சுற்றுப்போட்டி முடிவு

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஸ்கிறபிள் (**Scrabble**) கழகம் இலங்கை ஸ்கிறபிள் லீக் (**Sri Lanka Scrabble League**) உடன் இணைந்து நடாத்திய, யாழ். மாவட்ட வருடாந்த பாடசாலைகளுக்கிடையிலான முதலாவது ஸ்கிறபிள் சுற்றுப் போட்டி கடந்த 7ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களான வி.மயூரன் மாவட்டப் பாடசாலைகளில் சிறந்த ஸ்கிறபிள் வீரர் விருதினையும், மேற்பிரிவில் முதலாம் இடத்தினை க.விக்னனும் இரண்டாம் இடத்தினை அ.அல்பேட் நிமலனும் பெற்றனர். கீழ்ப் பிரிவில் இந்துக்கல்லூரி மாணவர்களான ஞா.வைகுந்தன் முதலாம் இடத்தினையும் பா.சேகரன் இரண்டாம் இடத்தினையும் பெற்றனர்.

பாடசாலை ரீதியாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முதல் இடத்தினையும் புனித பத்திரிசியார் கல்லூரி இரண்டாம் இடத்தினையும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, யாழ்ப்பாணக் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி என்பன முறையே மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களையும் பெற்றன. வெற்றிபெறறவர்களுக்கான பரிசுக் கிண்ணங்களை "யாழகம்" உரிமையாளர் வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் பிரதம நடுவராக இலங்கை ஸ்கிறபிள் லீக்கின் பாடசாலைகளுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளின் பொறுப்பாளரும், வைத்திய ஆலோசனை நிபுணருமாகிய எல்எம்.அமரசிங்க கலந்து கொண்டார். அன்றைய தினம் யாழ். இந்துக்கல்லூரியில் **Jaffna Scrabbler** என்ற ஈராண்டு இதழின் முதற்பாகம் நூல் வெளியீடும் இடம் பெற்றது. (ப-7)

# கிரிக்கெற் நட்சத்திரம் சினிமாவிலும் ஜொலிக்கும்

இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெற் வீரர் சச்சின் டெண்டுல்கர் சினிமாவிலும் நடிக்க இருக்கிறார்.

பிரபல தமிழ்த் திரைப்பட இயக்குநரான மணிரத்தினம் இயக்கும் குறுந் திரைப்படம் ஒன்றிலேயே டெண்டுல்கர் நடிக்க இருக்கிறார்.

மணிரத்தினம் இயக்கும் இத் திரைப்படம் ஊனமுற்றவர் தொடர்பானதாகும். இப்படத்தில் நடிக்க டெண்டுல்கர் ஒப்புக்கொண்டுள்ளார். இப படத்திற்கான தொடக்க விழா சென்னையில் விரைவில் ஆரம்பமாகவிருக்கிறது.

இதேவேளை, அவுஸ்திரேலிய அணிக்கெதிரான அனைத்துப் போட்டிகளிலும் டெண்டுல்கர் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. முழங்கையில் ஏற்பட்ட காயத்தில் இருந்து டெண்டுல்கர் முழுமையாகக் குணமடையவில்லை என இந்திய கிரிக்கெற் அணித் தேர்வாளர்கள் கூறியிருக்கின்றனர்.

'டென்னிஸ் எல்போ' காயம் காரணமாக கடந்த ஆகஸ்ட் மாததத்திலிருநது சச்சின் எந்தப் போட்டிகளிலும் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ப-7)

# ஐ.சி.சி.கூட்டத்தில் பங்கேற்க திலங்க சுமதிபாலவுக்கு அனுமதி

இலங்கைக் கிரிக்கெற் சபை, ஸ்ரீலங்கா ரெலிக்கொம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர் திலங்க சுமதிபால, பாகிஸ்தானின் லாகூர் நகரத்தில் எதிர்வரும் 16ஆம 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெற் சபைக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளார்.

இக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக இலங்கைக் கிரிக்கெற் சபைக்கு அவர் விடுத்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டதையடுத்தே அவர் இக்கூட்டத்தில் பங்குபற்றவுள்ளார்.

ஐ.சி.சி.செயற்குழுவின் நீண்டகால அங்கத்தவரான திலங்க சுமதிபால சர்வதேச அரங்கில் இலங்கையின் கிரிக்கெற் துறை வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டவர் என இலங்கைக் கிரிக்கெற் சபை அறிக்கை விடுத்துள்ளது.

பாதாள உலகக் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல உதவினார் என்ற குற்றச்சாட்டில் கடந்த ஜனவரி மாதம தலங்க சுமதிபால தடுப்புக்காவலில வைக்கப்பட்டிருந்தார். நீதிமன்றம் தற்போது அவரை பிணையில் செல்ல அனுமதித்திருக்கிறது. (ப-7)

# விளையாட்டு செய்திகள்

# பி.சி.சி.ஐ. தற்காலிக தலைவர்

# நீதிமன்றில் அறிக்கைத் தாக்கல்

இந்திய கிரிக்கெற் சபையின் தற்காலிகத் தலைவராக நியமிக்



கப்பட்ட முன்னாள் மேல்நீதிமன்ற நீதிபதி எஸ்.மோகன், மும்பையில் உள்ள கிரிக்கெற் சபை அலுவலகத்திற்கு தனது கடமையை பொறுபபேற்கச் சென்றபோது நடைபெற்ற சமபவங்கள் குறித்து உயர் நீதிமன்றத்திற்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறார்.

அவர் அலுவலகத்திற்குச் சென்றபோது அலுவலகம் பூட்டப்பட்டிருந்ததால் அவர் சென்னை திரும்பியதாகத் தெரியவருகிறது. ஆயினும் அவர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பித்த அறிக்கையில் உள்ள விபரங்களை தெரிவிக்க அவர் மறுத்து விட்டார். (ப-7)

# யாழ்-நல்லூர் கோட்ட மட்ட தாச்சிச் சுற்றுப்போட்டி

யாழ்.கல்வி வலயத்திற்குட்பட்ட நல்லூர் மற்றும் யாழ்.கோடடப் பாடசாலைகளுக்கிடையிலான தாச்சிச் சுற்றுப்போட்டி, நாளை வெள்ளிக்கிழமை மதியம் 1.00மணிக்கு, கோணடாவில் இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

13 வயதிற்குட்பட்ட ஆண், பெண் பிரிவுகளாக நடைபெறவுள்ள இப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளை தமது பொறுப்பாசிரியர்களுடன் வருகை தருமாறு, அணிகளில் இடம்பெறும் அங்கத்தவர்களின் பெயர் பட்டியலின் இரு பிரதிகள் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு கொண்டுவரப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேலும் அவர்களது உணவு, குடிநீர், பாதுகாப்பு போன்றவற்றுக்கு அந்தந்த அணிகளின் பொறுப்பாசிரியர்களே பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

போட்டியிடும் அணிகள் பொருத்தமான உடையுடன் வருவதுடன் கிளி அல்லது தாச்சி மாறுபட்ட உடையுடன் வரவேண்டும்.

போட்டிகள் யாவும் குறித்த தினத்தில் நடாத்திமுடிக்கப்படாவிட்டால் மறுநாள் சனிக்கிழமை தொடர்ந்தும் நடைபெறும்.

நல்லூர் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான 13வயதுக்குடபட்ட ஆண்கள் பிரிவு பங்குபற்றும் பாடசாலைகள்:-

யா/செங்குந்தா இந்துக்கல்லூரி, யா/இளையதம்பி இந்து வித்தியாலயம், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தி., யா/கோண்டாவில் ஸ்ரீ பார்வதி வித்தி, யா/கோணடாவில் இராமகிருஷ்ண வித்தி. யா/பெரியபுலம் ம.வித்தி., யா/கோண்டாவில் இந்து ம.வித்தி, யா/கனகரத்தினம் ம.ம.வித்தி.,

13வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் பங்குபற்றும் பாடசாலைகள்:-

யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தி. யா/கோண்டாவில இந்து ம.வித்தி. யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தி., யா/இளையதம்பி இந்து வித்தி., யா/செங்குந்தா இந்துக் கல்லூரி, யா/கனகரட்ணம் ம.ம. வித்தி, யா/பெரியபுலம் ம.வித்தி.

யாழப்பாணம் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 13வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் யாழ்.புனித மரியாள் வித்தியாலய அணி, யா/திருக்குடும்ப கன்னியர் மட அணியை எதிர்த்து விளையாடும்.

13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவுப் போட்டியில், யா/புனித ஜோசப் வித்தியாலய அணி, யா/புனித மரியாள் கல்லூரி அணியை எதிர்த்து விளையாடும். (ப-7)

# ஐயங்கள் ஆயிரம்

## ஆழமும் பய உணர்வும்

**மலையிலிருந்தோ, உயரமான மொட்டை மாடியிலிருந்தோ கீழ்நோக்கிப் பார்த்தால் ஒருவித கலக்க உணர்வு ஏற்படுவது ஏன்? அதுவே எவ்வளவு உயரம் மேல் நோக்கிப் பார்த்தாலும் ஒன்றும் ஏற்படுவதில்லையே ஏன்?**

வேறு ஒன்றுமில்லை. அத்தகைய காட்சி நமக்கு அடிக்கடி கிடைக்கப்பெறாத ஒன்று. கிடைமட்டமாக எத்தனை தொலைவு வேண்டுமானாலும், மேல்நோக்கி எத்தனை உயரம் வேண்டுமானாலும் பாக்கலாம் கலக்கம் ஏற்படாது. அத்தகைய காட்சிகள் குழந்தைப் பருவத்திலிருந்தே பரிச்சயமானவை.

ஆழத்தைப் பார்க்கக்கூடிய வாய்ப்பு நமக்கு அடிக்கடி ஏற்படுதவதில்லை. ஆதி கால மனிதருக்கு மலை உச்சியில் அப்படி ஒரு காட்சி கிடைத்திருக்கும். நமக்கு அடுக்கு மாடிக் கட்டடம் வந்தபிறகு ஏற்பட்டுள்ளது.

நமது காட்சி உறுப்பும், ஜாக்கிரதை உணர்வும் தொடர்புடையவை. தலைக்கு மேலே எத்தனை உயரமிருந்தாலும் அச்சமில்லை. ஏனெனில், அது ஆபத்தில்லாதது. ஆனால் ஆழம் என்பது அப்படிப்பட்டதில்லையே! விழுந்தால் மரணம் என்பதால் ஆழக் காட்சிகள் நம்மில் பய உணர்வை ஏற்படுத்துகின்றன. பழகிவிட்டால் அது மறைந்துவிடும்.

# உலக நாடுகள் எத்தனை?

உலக நாடுகளின் எண்ணிக்கை எத்தனை என்று யாரிடமாவது கேட்டால் கண்டிப்பாக ஒரு குழப்பமாகத்தான் பதில் சொல்வார்கள்.

இன்டர்நெட்டில் தேடுபவர்களுக்கும் சரியான எண்ணிக்கை கிடைத்துவிடும் என்று சொல்லிவிடமுடியாது. எல்லா இடங்களிலும் குழப்பத்துக்கு காரணங்கள் இல்லாமல் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக உள்ள நாடுகளின் மொத்த எண்ணிக்கை 191. இதில் வாடிகன் சிட்டி உறுப்பினராக இல்லை.

எல்லா நாடுகளிலும் ஐ.நா. தனது அலுவலகங்களைக் கொண்டுள்ளது. எனவே பலர் ஐ.நாவில் உறுப்பினராக உள்ள நாடுகள்தான் ஒட்டுமொத்த உலகநாடுகள் என்று கணக்கில் கொள்கிறார்கள். வாடிகன் சிட்டியைச் சேர்த்து மொத்த நாடுகளின் எண்ணிக்கை 192. அமெரிக்கா இந்த எண்ணிக்கையை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால் இதுவும் உண்மை அல்ல.

தைவான், திபெத், பெர்முடா, கிரீன்லாந்து, பயட்டோரிகோ போன்ற நாடுகள் உலக நாடுகளால் தனிநாடு என்று முழுமையாக அங்கீகாரம் பெறவில்லை.

தைவான் சீனாவின் கீழ் இல்லை என்பதை பல நாடுகள் ஏற்கமறுக்கின்றன. எனினும் தனிநாட்டுக்குரிய அத்தனை தகுதிகளும் தைவானுக்கு இருப்பதால் அது தனி நாடுகள்பட்டியலில் சேர்க்கப்படுகிறது.

தவிர, சமீபத்தில் சுதந்திரம் பெற்ற கிழக்கு திமோர் ஆகிய அனைத்தையும் சேர்த்து உலக நாடுகளின் மொத்த எண்ணிக்கை 193 என்று கூறலாம்.

# கருவறை அழுத்தம்

உடல் உபாதைகளை ஏற்படுத்தும் கருவறை அழுத்தம் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பல நோய்களை ஏற்படுத்தும் என்பதை நாம் அறிவோம். வயிற்றிலிருக்கும் குழந்தைக்குத் தேவையான அளவு ஊட்டச்சத்து கிடைக்கவில்லையென்றால் நீரிழிவு நோய் மற்றும் வேறு பல நோய்கள் உண்டாகக்கூடும் என்பதை அறிவீர்களா?



ஆம், வயிற்றிலிருக்கும் குழந்தைக்குத் தேவையான ஊட்டச்சத்தினை ஒருதாய் அளிப்பதன் மூலமே அதன் எதிர்கால வாழ்வை நலமாக ஆக்கமுடியும். ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் எடைகுறைவு மட்டும் ஏற்படுவதில்லை. எதிபாராத பாதிப்புகள் பல ஏற்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் நீரிழிவுநோய் என்கிறார்கள் மருத்துவ நிபுணர்கள்.

ஜீன்களைத் தவிர ஒரு மனிதனின் வருங்கால உடல் பாதிப்புக்கு முக்கிய காரணம் கருவறையில் ஊட்டச்சத்துக் குறைபாடு. ஒரு கரு உருவானது முதலே அழுத்தம் உடலைப் பாதிக்கிறது. ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் இந்தக் கருவறை அழுத்தம் ஏற்படுகிறது. இதனால் பல பாதிப்புகள் ஏற்பட்டு அது உடல்நலனுக்கு ஆபத்தாக அமைவதோடு மனதையும் பாதித்து பிறப்பிலிருந்து இறப்புவரை ஒருவரது வாழ்வையே பாதித்துவிடுகிறது.


ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏற்படும் இந்த அழுத்தத்தை விட ஊட்டச்சத்து அளவுக்கு அதிகமாக இருப்பது ஒன்றும் பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. ஊட்டச்சத்து அதிகரிப்பால் குழந்தைகள் அளவில் பெரியதாக இருப்பதால் தாய்க்குத்தான் பிரச்சினை.

அதுமட்டுமன்றி, தாய் அதிகமாக உண்டால் அதனால் கரு பாதிக்கப்படாமல் இருக்க தடுப்புகள் உள்ளன. ஆனால் தாய்க்கே ஊட்டச்சத்துக் குறைவாக இருக்கும் போது, அது குழந்தையைத் தாக்காமலிருக்க எந்தத் தடுப்பும் இல்லை.

ஊட்டச்சத்துக் குறைபாட்டிலிருந்து அதிக ஊட்டச்சத்துக்கு மாறுவது பரிதாபத்துக்குரியது. ஏனெனில், இதனால் நீரிழிவு நோய் போன்றவை ஏற்படும். ஊட்டச்சத்துக் குறைபாடு உண்டாவதால் வாழ்வில் பல மனநல பிரச்சினைகளோடு, உயிருக்கே ஆபத்தான உடல் உபாதைகளும் ஏற்படும். ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் பிறந்தவர்களுக்கு நீரிழிவுநோய், இதயநோய், அதிகப்படியான கொழுப்புப் பிரச்சினை போன்றவை ஏற்படுகின்றன என்கிறார்கள் மருத்துவர்கள்.

எனவே, இந்த அழுத்தம் உருவாகக் காரணமான ஊட்டச்சத்துக் குறைபாட்டை முதலில் நிறுத்தவேண்டும். எனவே கர்ப்பமான பெண்கள் சரியான அளவில், சரியான நேரத்தில் சாப்பிட்டு தங்கள் குழந்தைகளின் மன மற்றும் உடல்நலனைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல - 31



*அனுப்ப வேண்டிய முகவரி-*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 31**
**'வலம்புரி - சங்குநாதம்'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

முழுப் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
..........................................
..........................................

இங்கே வெட்டுக ------------------------------------

## இடமிருந்து வலம்

(1) யுத்த சூழ்நிலையில் மக்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அமுல்படுத்தப்படுவது (குழம்பியுள்ளது). (4) முடிவு - இதனைக் குறிக்கும். (5) மாணவர் இதனை ஒரு பாடமாக கற்கின்றனர். (6) 'இதில் நாம் செய்வதன் நன்மை தீமையின் பலன் மறுமையில் கிடைக்கும்' என்பர். (9) இரவு - இதனை இப்படியுமழைப்பர். (10) உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதது.

## மேலிருந்து கீழ்

(1) இது உள்ளவன் சாதனை படைப்பான். (2) நல்ல முயற்சிகளுக்கு இது விளைவிக்கக்கூடாது. (3) செல்வம் - இதனைக் குறிக்கும். (4) பிறருக்கு இது செய்வதைத் தவிர்க்கவேண்டும். (6) தானிய வர்க்கத்தைச் சேர்ந்தது. (7) மாலை மயங்கும் வேளையை இப்படியும் கூறலாம். (8) இங்கிருந்து மர்மப் பொருட்கள் வீழ்வதாகக் கூறப் படுகிறது.

***விடைகளை நிரப்பி எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.***

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 29இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1.இங்கிதம் 4.ஊறு 5.பயறு 6.ஒற்றுமை 8.புயல் 9.ஆல் /வாகை/நாகை

**மேலிருந்து கீழ்**

1.இன்பம் 2.கிணறு 3.ஆறு 4.ஊன்றுகோல் 7.தையல்/நங்கை/காரிகை 8.புறா

## பரிசு பெற்றோர் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| **முதற் பரிசு** | :- | **க.யசோதரன்**<br>**கண்டி வீதி,**<br>**சாவகச்சேரி.** |
| **இரண்டாம் பரிசு** | :- | **ம.சிந்துஜா**<br>**கட்டுடை,**<br>**மானிப்பாய்.** |
| **மூன்றாம் பரிசு** | :- | **கா.பொ.இ.குலசிங்கம்**<br>**5ஆம் வட்டாரம்,**<br>**நயினாதீவு.** |

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

க.வத்ஷலா, சித்தன்கேணி. S.விவேக், வியாபாரிமூலை. P.செல்வராணி, சங்கானை. செ.இராசதேவி,கோப்பாய். K.இராஜகோபால், தொல்புரம். வ.மன்னர்அன்ரனி, குருநகர். பா.அன்பினி, சண்டிலிப்பாய். சி.சியாமளா, சுன்னாகம். த.யோகராசா, சாவகச்சேரி. ச.பதுமன், நாகர்கோவில். ச.பாரதி, அல்வாய். பா.தர்ஜினி, சண்டிலிப்பாய். வே.குமாரசுவாமி, கரவெட்டி. வி.செல்வநாயகம், புத்தூர். S.சிவந்தா, சாவகச்சேரி. இ.குமரன், அரியாலை. வ.மகீபன், கரவெட்டி. சி.பாலசுந்தரம், சண்டிலிப்பாய். S.சரோஜா, நல்லூர். கே.அரசேஸ்வரன், நல்லூர். சு.பிரபாகரன், முல்லைததீவு. ந.நஞ்சிதா, யாழ்ப்பாணம்.




# பெண்

வளர்ச்சி கண்ட உலகத்திலே பெண்ணின் நிலை எப்படியிருக்கிறது? துன்பநிலையில் இருக்கிறதா அல்லது வியப்பு நிலையில் இருக்கிறதா? பெண்தான் பதில் சொல்லவேண்டும். நாகரிக உலகைப் பொறுத்தவரையில் பெண் மிக முக்கியமான பொருளாக உணரப்படுகிறாள். அழகிப் போட்டிகள், விளம்பரங்கள் என நாகரிக உலகில் பெண்ணின் பங்களிப்பு முக்கியமாகத் திகழ்கிறது. ஆனால் இவற்றிற்கெல்லாம் பெண்ணின் அழகே தூக்கி நிறுத்தப்படுகிறது. இதனால் பெண் காட்சி /கவர்ச்சிப் பொருளென்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறாள்.

இன்னொரு புறத்திலே 'பெண் சுதந்திரம்' என்ற பயணத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பெண்களின் செயற்பாடுகளில் நிறைய மாற்றங்களை உணரமுடிகிறது. சுதந்திரம் பற்றிப் பேசி காலத்தை வீணடிக்காது அதற்குரிய வழிமுறைகளைக் கையாண்டு புதிய பாதையை தற்போது பெண்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். பிறரில் தங்கியிராமை, சுயதொழில், சுயமுயற்சி, பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து அதை வெல்லும் திறமை என்பவற்றை பெண்கள் தற்போது பெற்றிருக்கிறார்கள். இதனால் வெற்றி இலகுவாகிறது.

பெண்ணைப் பொறுத்த மட்டிலே அவளது செயற்பாடுகளுக்கு சூழலே பெரும் தடங்கலாக அமைந்தது. ஆனால் பெரும்பாலானோரின் கருத்து 'ஆண் அடக்குமுறையின் எழுச்சியே பெண்ணின் வீழ்ச்சி' என்பதுதான். ஆனால் இக்கருத்தில் சிறிதளவு உண்மைத் தன்மை இருந்தாலும் இதை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆணைவிட சமுதாயம் பெண்ணுக்கே சடங்குகள், சம்பிரதாயங்கள். மரபுவழி முறைகள் என பலவகையான கட்டுக்களைப் போட்டிருக்கிறது. இவற்றை எவரும் கவனிப்பதில்லை.

நமது கலாசாரத்தை, நம் இனத்தின் இருப்பை உணர்த்துவதற்கு சடங்கு, சம்பிரதாயங்கள் தவிர்க்க முடியாதவைதான். ஆனால் அவை பெண்ணுக்கு இட்ட விலங்காக அமைந்துவிடக்கூடாது என்பதே பலரின் எதிர்பார்ப்பாகும். மேலை நாடுகளில் சடங்கு சம்பிரதாயங்கள் இல்லையெனினும் அங்கு பெண்ணுக்கு கிடைத்த சுதந்திரம் பெரும்பாலும் பெண்களால் தவறான சுய விருப்



பின் வழியில் கைக்கொள்ளப்படுகின்றமை பெண் சுதந்திரத்திற்கு பெண்களால் இழைக்கப்படும் மிகப் பெரிய கொடுமையாகும்.

பெண் சுதந்திரம் பற்றிய தப்பான அபிப்பிராயம் நம்மில் பலரிடம் இருக்கிறது. இதற்குக் காரணம் அவர்களின் தவறான பார்வையாகும். அதேவேளை, பெண்சுதந்திரத்தை தவறான வழியில் உபயோகிக்கும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வகையான பெண்களே கலாசார சீரழிவுகளுக்கு வழி வகுக்கிறார்கள். சுதந்திரம் என்பது நமது பாரம்பரிய விழுமியங்களைக் கட்டிக்காப்பதாகவே இருக்கவேண்டும். மாறாக, நம் இனத்தின் பெறுமதியை சீர்குலைக்குமுகமாக இருக்குமானால் அது எந்தச் சுதந்திரமாக இருந்தாலும் அர்த்தமற்றதாகிவிடும்.

அழகு என்பது பெண்ணுக்கு வேண்டப்பட்டதொன்றாகி விட்டது. 'அழகென்றால் பெண், பெண்ணென்றால் அழகு' எனும் நிலையே தற்போது காணப்படுகிறது. அழகு பெண்ணிற்குப் பெறுமதி சேர்க்கும் விடயமாகக் காணப்பட்டாலும் அதுவே மறுபுறத்தில் பெண்ணை காட்சிப் பொருளாகக் காண்பிக்க உதவுகிறது.

இன்று உலக அளவிலே நடைபெறும் அழகிப்போட்டிகள் ஒருபுறத்தில் உலகிற்கு பெண்ணை அடையாளப்படுத்தினாலும் இன்னொரு வகையில் பெண்ணிற்குத் தலைகுனிவு தரும் விடயமாகக் கருதப்படுகிறது. அழகிப்போட்டிகளுக்கு எதிர்ப்பு வலுத்து வருவது இதற்கு தக்கசான்றாகும். இன்று நம்மிடையே ஊடுருவும்அழகு நிலையங்கள், பிற்காலத்தில் இங்கும் அழகிப்போட்டி நடைபெறுவதற்கான திறவுகோலாக அமையுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதன் விளைவு பெண்களிடையே போட்டி, பொறாமை ஏற்பட்டு 'புரிதல்' தன்மை இல்லாது போகும் அபாயம் இருக்கிறது.

சராசரியாக ஒவ்வொரு பெண்ணும் தன் சூழலுக்கு எத்தகைய பங்கை ஆற்ற விரும்புகிறாள்? ஆணின் பங்கு எத்தகையதோ அதேயளவுதான் பெண்ணுடையதும். தன்னுடைய பங்கை சரி செய்வதிலும் பெற்றுக்கொள்வதிலும் பெண் முனைப்பாக இருக்கவேண்டும். அப்போதுதான் ஆணின் தலையீடு தவிர்க்கப்படும். சமூகத்திற்கான உழைப்பில் பெண் ஈடுபடவேண்டும். மூட நம்பிக்கைகள, பழக்கவழக்கங்கள் என்பவற்றை மாற்றுவதிலும், சரி செய்வதிலும் பெண்ணின் பங்களிப்பு மிக முக்கியமான தொன்றாகும். பெண்ணின் பங்களிப்பு சமுதாயத்திற்கு கிடைக்கும் போதுதான் சமுதாயத்தின் பார்வை பெண்களின் பக்கம் திரும்பும்.

குடும்பப் பெண்களைப் பொறுத்தவரையில் 'சுதந்திரம்' தேவையில்லாத விடயம் என ஒதுங்கிவிட முடியாது. சுதந்திரத்திற்கான வேலைப்பாடுகளில் குடும்பப் பெண்களும் ஈடுபடவேண்டும். அனைவரது ஒத்துழைப்பின்மூலமே வெற்றி கிட்டும். தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் அடங்கிவிடுவதில் எவ்வித பிரயோசனமுமில்லை. வெளியே வந்து வாழப்பழகவேண்டும். சூழலை அறிவதில் ஆர்வம் இருக்கவேண்டும். பக்கத்து வீட்டாரைத் தெரியாதவர்களாக இன்று பல குடும்பப் பெண்கள் வீட்டுககுள்ளேயே 'சீரியல்' களோடு வாழ்வது அதிர்ச்சியான விடயமாகும்.

ஆணின் செயற்பாடு பெண்ணின் செயற்பாட்டில் தாக்கம் ஏற்படுத்தினாலும் அப்படியான ஆண்களுக்கு பெண்களே பதிலளிக்க வேண்டும். அதேவேளை, ஆண்கள் பெண்களின் ஆர்வம், முயற்சி என்பவற்றிற்கு கைகொடுக்க வேண்டும். தோள் கொடுத்து உதவவேண்டும். ஆண்கள் அடக்குமுறையின் வடிவமாக தம்மை மாற்ற முயறசிக்கக்கூடாது. பெண்ணிற்கு நல்ல தோழியாக இருப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். ஆண்கள்மீது சுமத்தப்படும் பழிகளிலிருந்து விடுபடுவதற்கு ஆண்கள்தான் முயறசிசெய்ய வேண்டும். இதுவே பெண்களுக்கு ஆண்கள் செய்யும் பெரும் உதவியாகும்

## ஓர் மசாலாப் பார்வை

'பெண்ணின் எழுச்சியில்
ஆணின்பங்கு
ஆணின் எழுச்சியில்
பெண்ணின் பங்கு
இதுவே சமுதாயத்தின் எழுச்சி'

*வித்யாசங்கர்*

# பெண்களுக்கு மன அழுத்தம் அதிகம் வருவது ஏன்?



சோகத்திற்கு இணையான மனநிலைதான் மன அழுத்தம் என்பது. சந்தோஷம் ஏற்படுவது போலவே சோகமும் ஏற்படுகிறது. சூழ்நிலைகள் மாறும்போது மாறுகிறது. இந்தச் சோகம் இரண்டு வாரங்களுக்குமேல் நீடிக்கும்போதுதான் பிரச்சினைகள் உருவாகின்றன. உடல் உபாதைகளுக்கு வழிவகுக்கின்றன. மன அழுத்தம் தொடர்ந்து இருக்கும்போது இடதுபக்க மூளை செயலிழக்கிறது.

என்ன காரணம் என்றே கண்டறியப்படாமல் பெண்களை ஆட்டிப்படைக்கிறது மன அழுத்தம். பெண்களிடம் ஏற்படும் கோளாறுகளை வைத்து அவர்கள் எந்த ரீதியான மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர் என்று உலக சுகாதார மையம் கண்டறிந்துள்ளது.

'யுனிபோலார் மேஜர் டிப்ரெஷன்' என்ற மன அழுத்தத்திற்கு பெரும்பான்மையான பெண்கள் அடிமையாகின்றனர்.

இன்னொரு வகையான மன அழுததமும் பெண்களை ஆட்டிப்படைக்கிறது. அது 'மாஸ்க்டு டிப்ரெஷன்' அல்லது 'ஸ்மைலிங் டிப்ரெஷன்' என்றழைக்கப்படுகிறது.

யுனிபோலார் மேஜர் டிப்ரெஷன் வந்தால் எப்படி நடந்துகொள்வர்கள்? மூட் அவுட் ஆகி மூலையில் உட்காருவீர்கள். வாழ்க்கைமீது வெறுப்பு ஏற்படுதல், குற்ற உணர்வு, தாழ்வுமனப்பான்மையில் மனம் வெதும்புதல், சந்தோஷமான விஷயங்களில் நாட்டம் இல்லாமல் இருத்தல். இப்படி மன ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு சோர்வு ஏற்படுதல், எதற்கெடுத்தாலும் கோபபடுதல், பசியின்மை, தூக்கமின்மை ஆகியவை ஏற்படும்.

ஸ்மைலிங் டிப்ரெஷன் வந்தால் எப்படி நடந்துகொள்வர்கள்? எதையோ பறிகொடுத்தது போல அமர்ந்திருத்தல். வெளியில் பார்க்கும்போது நீங்கள் மன அழுத்தத்தில் இருப்பது யாருக்கும் தெரியாது. ஆனால் சோர்வாய், எதையும் செய்யப் பிடிக்காமல் அமர்ந்திருத்தல், யோசித்தபடி இருத்தல், பசியின்றி இருத்தல், உடல் உறவு கொள்ளவேண்டும் என்று அடிக்கடி தோன்றுதல் ஆகியவை தான் இதற்கான அறிகுறிகள்.

மன அழுத்தம் குறித்து டாக்டர்கள் என்ன கூறுகின்றனர்?

நாற்பது வயதை எட்டுபவர்களும், 40வயதைக் கடந்தவர்களும் இம்மாதிரியான மனஅழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். ஹார்மோன் மாற்றங்களினால்தான் இப்படி நிகழ்கிறது. யுனிபோலார் மேஜர் டிப்ரெஷன் வருபவர்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவர். அது முடியவில்லை எனில் ஹார்ட் அட்டாக், ஸ்ட்ரோக, சர்க்கரைநோய் ஆகியவற்றால் பாதிக்கப்படுவர்.

ஸ்மைலிங் டிப்ரெஷன் வந்தவர்களுக்கு அடிக்கடி தலைவலி ஏற்படும். தனது வேலைகளைச் சரிவர முடிக்கமுடியவில்லை என்று கருதுபவர்களுக்கு அடிக்கடி தலைவலி வரும். முதுகுவலியும் இதனால் தான் ஏற்படுகிறது.

இப்படி தன்னைப் பற்றிய குறையினாலேயே மன அழுத்தம் பெறுபவர்கள் இந்த உணர்விலிருந்து வெளியே வருவது தான் ஒரேவழி. இந்த உணர்வு தொடர்கதையானால் சர்க்கரைநோய், ஹைப்பர்டென்ஷன் ஆகியவை ஏற்படும்.

### எப்படி இதிலிருந்து மீள்வது?

மன அழுத்தம் ஏற்பட்டுள்ளது என்பதை உணர்வதே அதிலிருந்து மீண்டுவர உதவி செய்யும். மன அழுத்தம் ஏற்பட்டுள்ளவர்களிடம் பேச்சுக் கொடுத்து பிரச்சினைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அதிலிருந்து மீட்க வழி தெரிந்தால் சொல்லிக்கொடுக்கலாம். அல்லது மனநல மருந்துவரிடம் காண்பித்து சரி செய்து கொள்ளலாம்.

## சமைத்துச் சுவைப்போம்

### இறைச்சிப் புரியாணி



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| சம்பா அரிசி | 1kg |
| இறைச்சி | 1/2kg |
| வெங்காயம் | 1/4Kg |
| உருளைக்கிழங்கு | 1/4Kg |
| இஞ்சி | 50g |
| பூடு | 50g |
| நெய் | அளவுக்கு |
| கறுவா | அளவுக்கு |
| ஏலம் | அளவுக்கு |
| தேங்காய் | பாதி(பால்) |
| உப்பு | அளவுக்கு |
| முட்டை | 4 |
| மிளகாய்த்தூள் | அளவுக்கு |
| மிளகுத்தூள் | அளவுக்கு |
| கறிவேப்பிலை | அளவுக்கு |

**செய்முறை:-**

இறைச்சியைக் கழுவி துண்டுகளாக வெட்டி அதனுடன் கூட்டுச் சாமான்களில் அரைவாசியைக் கலந்து சிறிது நெய்விட்டு நன்கு வதக்கவும். அரிசியைக் கழுவி பாலில் வேகவிடவும். பின் மிகுதி கூட்டுச் சாமான்களையும் சேர்த்து வேகவிட்டு இறக்கவும். பின் நெய்யில் வெங்காயம், உருளைக்கிழங்கு, கறுவா, கறிவேப்பிலை ஆகியவற்றைப் போட்டுத் தாளித்து அதனுள் சோற்றையும், இறைச்சி வதக்கலையும் சேர்த்து நன்கு பிரட்டவும். சிறிதுநேரம் இளம் சூட்டில் விட்டு பிரட்டியபின் இறக்கிப் பரிமாறலாம். தேவையாயின் முட்டையும் சேர்த்துக்கொள்ளலாம்.

# நலம் தரும் நவராத்திரி

உலகிலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் அன்னையாக இருந்து காப்பவள் அன்னை பராசக்தி. சக்தியின்றேல் சிவம் இல்லை என்



பதற்கிணங்க 14 உலக இயக்கங்களையும் சக்திவடிவான அம்பிகையே ஆற்றிவருகிறாள். இதனால் பண்டைக்காலம் தொட்டு இற்றைவரை சக்திவழிபாடு இந்துகள் மத்தியிலே பரவலாக வியாபித்துள்ளமை கண்கூடு.

சக்தி வழிபாட்டு முறைகளிலே மிகப்பெரிய அளவில் ஆண்டுதோறும் தமிழ் மக்கள் மத்தியில் பிரபலமாக அனுஷ்டிக்கப்படும் விரதமே நவராத்திரியாகும்.

புரட்டாதி மாத வளர்பிறை பிரதமை தொடக்கம் நவமி ஈறாக வரும் ஒன்பது நாட்களையும் நவராத்திரி என்பர். அடுத்த நாள் விஜயதசமி தினமாகும்.

இந்நாட்களில் அம்பாளைக் கும்பத்திலே எழுந்தருளச்செய்து மந்திர உச்சாடனங்களால் அவளை ஆவாகனம் செய்து முதல் மூன்று நாட்களிலும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், அடுத்து வரும் மூன்று நாட்களிலும் செல்வத்தை வேண்டி இலக்குமியையும், இறுதி மூன்று நாட்களிலும் கல்வி, ஞானம் வேண்டி சரஸ்வதியையும் உருவகித்துப் பூசைகள் செய்வர். இந்த ஒன்பது இரவுகளிலும் முக்குணங்களாகிய இராட்சதம், தாமதம், சாத்வீகம் என்பவற்றை சித்தரிக்கும் முகமாக ஆண்டுதோறும் இல்லங்களில் கொலுவைத்து இரவுக் காலங்களில் பூசை, ஆராதனை வழிபாடு செய்யும் வழக்கம் தமிழர் பரந்துவாழும் நாடுகளில் எல்லாம் இருந்து வருகிறது.

ஆசைக்கடலில் மூழ்கி அருஎற்ற பாச வலைகளில் சிக்கி அலலல்படும் எம்மை பனிமுறுவல் தவழும் திருநகை காட்டி நேசத்துடன் அணைத்துக் கரையேற்றிவிட வல்லவள் அம்பிகையே.

அவளை இதய சுத்தியோடு வந்திப்பவர்களுக்குக் கரையிலாக் கருணை வெள்ளம் பொழிந்து வழிந்து ஆட்கொண்டு ஆன்ம ஈடேற்றம் அளிப்பாள்.

எனவே, இந்த நவராத்திரி தினங்களில் அம்பிகையை முறைப்படி நோன்பிருந்து வழிபட்டுப் பூசைகளை கிரமமாக நடாத்தி வருவோமானால் எமக்குச் சகல சம்பத்தையும் அம்பிகை அளிப்பாள என்பது திண்ணம்.

**"பிணியே பிணிக்கு மருந்தே அமரர்**
**பெருவிருந்தே**
**பணியேன் ஒருவரை நின் பத்ம**
**பாதம் பணிந்த பின்னே"**

**நயினை விஜயன்**

---

# வட-கிழக்கில் வீடுகள் நிர்மாணிப்புக்கு
# உலகவங்கி ஏழரைக் கோடி ரூபா நிதியுதவி

(கொழும்பு)

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் வடக்கு-கிழக்கில் சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாகப் புதிய குடியிருப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன.

சுமார் 46ஆயிரம் வீடுகளை அமைக்கவென்ற இந்தத் திட்டத்திற்கென உலகவங்கி ஏழரைக் கோடி ரூபா நிதியினை வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.ரங்கராஜா தெரிவித்தார்.

யுத்த அனர்த்தங்களினால் வடக்கு-கிழக்கில் சுமார் 3 இலட்சத்து 25 ஆயிரம் வீடுகள் முற்றாகவோ அன்றி பகுதியாகவோ சேதமடைந்துள்ளன. இவ்வாறு சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக இத்திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக 46ஆயிரம் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், புதிய வீடுகளை அமைப்பதற்கென ஒவ்வொரு குடுமபங்களுக்கும் தலா ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. அத்துடன், திருத்தவேலைகளுக்கென தலா 75ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற)

## ஐக்கிய தேசியக் கட்சிக்கான பிரசாரத்தில் திலக் கருணாரட்ண

(கொழும்பு)

எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சியின வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக திலக் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியில் இருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துகொண்டுள்ள திலக் கருணாரட்ண, கடந்த ஞாயிற்றுக்கிழமை பண்டாரகம மகாவெல்லன கட்சிக்கு உறுப்பினர்களைச சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட சமயமே இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் பண்டாரகம தொகுதக்கான அமைப்பாளராக தாம் தற்போது செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

முழுத் தொகுதிகளிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பலத்தைக கட்டியெழுப்பவேண்டும். இதன் மூலம் எந்தவொரு தேர்தலிலும் பணடாரகம தொகுதியில் எம்மால் வெற்றிகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-121)

## தம்புதோட்டப் பிரதேசம் பொதுமக்கள் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

தெனமராட்சியில் அமைந்திருக்கும் தமபுதோட்டப பிரதேசம் விரைவில் பொதுமக்களின் பாவனைக்காக கையளிக்கப்படவிருக்கின்றது.

இராணுவ வெடிபொருட்கள் அகற்றும் பொறியியற் பிரிவின் செயற்பாட்டில் இப்பிரதேசத்தில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு யாழ்.செயலகத்தில் இயங்கும் கண்ணிவெடி அகற்றும் பகுதியனரால் கையளிக்கப்படவுள்ளன.

இவர்கள் இப் பிரதேசத்தை உறுதிப்படுத்திய பின்னர் பொது மக்களின் பாவனைக்காக கையளிக்கவுள்ளனர். (ற-5)

## லெப்.கேணல் விக்ரரின் 18ஆம் ஆண்டு நினைவு தினம்

விடுதலைப் போராட்ட வரலாற்றில் பல வெற்றிகளைப் படைத்து வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்ரினன் கேணல் விக்ரரின் 18 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேறறு முன்தினம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது. பிற்பகலளவில் லெப்ரினன் கேணல் விக்ரரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி மடுமாதா சந்தியிலிருந்து ஆரம்பமாகி மன்னார் பொது மைதானத்தை சென்றடைந்தது. அங்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந் நிகழ்வுகள் மன்னாரில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் மன்னாரில் பெருந்தொகையான பொலிஸார் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் மக்கள் ஆயிரக்கணக்கில் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர். (ம.8)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் நவராத்திரி விழா இன்று பி.ப.5.00 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்ச்சிகளாக, பூசைவழிபாடு, சரஸ்வதி தோத்திரமும், திரு. கந்த சத்தியதாசனின் சக்திவழிபாடு பற்றி சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறவுள்ளன. (ற)

**வடமராட்சி கிழக்கு கிராமிய வைத்தியசாலை**

## புனரமைக்கப்பட்டுவிட்டபோதும் பாவனைக்கு விடப்படவில்லை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கிராமிய வைத்தியசாலையின் கட்டடவேலைகள் பூர்த்தியடைந்த போதிலும் அது இன்னமும் மக்கள் பாவனைக்கு விடப்படாதுள்ளது.

நிககொட் நிறுவனத்தின் 170 லட்சம் ரூபா நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட இவ் வைத்தியசாலை போதியளவு தளபாடவசதிகள் இன்மை காரணமாகவே புனரமைக்கப்பட்ட கட்டடத்திற்கு செல்லாதுள்ளது.

இந்நிலையில் மேற்படி வைத்தியசாலை தற்பொழுதும் தனியார் கட்டடம் ஒன்றிலேயே இயங்கிவருகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் தமக்கான வைத்திய சேவையை திருப்திகரமாக பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

இதுகுறித்து மக்கள் தமககுள்ள அதிருப்தியை வெளிப்படுத்திய போதும் உரிய தரபபினர் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை. (ப-35)

## சிறுவர், முதியோர் தின விழா

வேலணைப் பிரதேச செயலக சிறுவர், முதியோர் தின விழா பிரதேச செயலக மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பி.ப.2.00 மணிக்கு வேலணை உதவிப் பிரதேசசெயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் பொ.வேணுகோபாலும், சிறப்பு விருந்தினாகளாக வேலணை அரசினர் மருத்துவமனை மருத்துவப் பொறுப்பதிகாரி டாக்டர் ஆதிருநாவுக்கரசு மற்றும் வேலணை கால்நடை மருத்துவ அதிகாரி செல்வி எப்யூலியானா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

---

# மாதுறு ஓயா காட்டுப் பகுதியில் கைவிடப்பட்ட ஆயுதங்கள் மீட்பு

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் மாதுறு ஓயா காட்டு பகுதியில் நேற்று முன்தினம் காலை கைவிடப்பட்ட நிலையில் ஒரு தொகுதி ஆயுதங்கள் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அரலகங்வில பொலிஸாருக்கு பொது மக்களிடமிருந்து கிடைத்த தகவலையடுத்து அங்கு விரைந்த பொலிஸார் இதனை மீட்டுள்ளனர்.

எம்.16 ரக துப்பாக்கி- 1, அதற்கான 3 மகசீன்கள் மற்றும் 120 ரவைகள், கிரனைட்கள-3, டோர்ச் லைட் -1 என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக அரலகங்வில பொலிஸ நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

அவர்களது தகவலின் படி இந்த ஆயுதங்கள் அண்மையில் விடுதலைப் புலிகளின் அதிரடி நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட ரெஜி குழுவினருடைய ஆயுதங்களாக இருக்கலாம் என்றும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ற)

**கைதடி ஆயுர்வேத வைத்தியசாலையில் திருட்டு**

## சந்தேக நபர்கள் 6 பேருக்கும் 19ஆம் திகதிவரை விளக்கமறியல்

கைதடியில் அமைந்துள்ள அரசினர் சித்த ஆயுர்வேத போதனா வைத்தியசாலைகளில் 20ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் ஆறு பேரைக் கைதுசெய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைத்தார்.

இவ் ஆறு பேரையும் ஒக்டோபர் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ப-47)

## சர்வதேச சிறுவர், முதியோர் தின ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தையொட்டி நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே அண்மையில் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விபரம் வருமாறு:-

### சிறுவர் தினப்போட்டிகள்

**கட்டுரை கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்- ஸ்ரீ.அச்சுதை - கொக்குவில் இந்துஆரம்ப பாடசாலை
2ஆம் இடம்:- பூ.டார்வின் - ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
3ஆம் இடம்:- ர.விஜாந் - கொக்குவில் ஸ்தான சீ.சீ.த.க.பாடசாலை

**மத்திய பிரிவு**

1ஆம் இடம்- அ.கௌரிகா - கொக்குவில் இந்துக் கலலூரி
2ஆம் இடம் இ.சண்ஜியா - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.
3ஆம் இடம்:- நா.ஜெசிந்தா - உயரப்புலம் மெ.மி.த.க.வித்தி.

**மேற் பிரிவு**

1ஆம் இடம்-ஆ.பிரியந்தினி - இந்து மகளிர் கலலூரி
2ஆம் இடம்:-பா.ராஜ்குமார் - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.
3ஆம் இடம்:- க.சயானி - கொக்குவில் இந்துக்கல்லூரி

**உயர் பிரிவு**

1ஆம் இடம்-ப.கஜேந்தினி - கொக்குவில் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:-பி.எஸ்.வை.சஞ்சிதீபா - இந்து மகளிர் கலலூரி
3ஆம் இடம்:-இ.நிஷானி - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.

**கவிதை கீழ்ப் பிரிவு**

1ஆம் இடம்-சொ.லக்சனா - ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
2ஆம் இடம்:-ச.பூர்ணிமா - ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
3ஆம் இடம்:-வி.விபுல்சாந் - நல்லூர் ஞானோதய வித்தி.

**மத்திய பிரிவு**

1ஆம் இடம்-தே.விதுர்சன் - கொக்குவில் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:-பா.பானுஜா - கொ.இந்துக் கல்லூரி
3ஆம் இடம்-அ.நிஷாந்தினி - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.

**மேற் பிரிவு**

1ஆம் இடம்-சி.உறரிகரசர்மா - கொக்குவில் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:-வோ.சரண்யா - யாழ்.இந்து மகளிர் கலலூரி
3ஆம் இடம்:-ப.யாழினி - கனகரத்தினம் மத்திய மகாவித்தி.

**உயர் பிரிவு**

1ஆம் இடம்-ஜெ.ஷோபிகா - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.
2ஆம் இடம்:-கோ.நிஷாந்தி - செங்குந்தா இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:-ஜெ.கஜமுகி - யாழ்.இந்து மகளிர் கலலூரி

### முதியோர் தினப்போட்டிகள்

**கட்டுரை கீழ்ப் பிரிவு**

1ஆம் இடம்-த.துவாரகன் - ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.
2ஆம் இடம்:-சி.துளசிகா - இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
3ஆம் இடம்:-சி.மிதுலா - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

**மத்திய பிரிவு**

1ஆம் இடம்-பா.லக்ஷகா - செங்குந்தா இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:-பா.பிரமிளா - கோண்டாவில் பரஞ்சோதி வித்தி.
3ஆம் இடம்:-பா.உறமாஞ்சனி - நல்லூர் மங்கையக்கரசி வித்தி.

**மேற்பிரிவு**

1ஆம் இடம்-சா.யோஷகா - இந்துமகளிர் கல்லூரி
2ஆம் இடம்:-ச.சுதர்சனா - செங்குந்தா இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:-ஸ்ரீ.ரம்யா - கொக்குவில் இந்துக்கல்லூரி

**உயர் பிரிவு**

1ஆம் இடம்-க.சிந்துஜா - கனகரத்தினம் மத்திய மகாவித்தி.
2ஆம் இடம்:-ச.தேனகா - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.
3ஆம் இடம்:-ப.ஞானேஸ்வரன் - கோண்டாவில் இந்து மகாவித்தி.

**கவிதை கீழ்ப் பிரிவு**

1ஆம் இடம்-ச.ததுசன் - நல்லூர் ஞானோதய வித்தி.
2ஆம் இடம்:-ம.சாகித்தியா - இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை
3ஆம் இடம்-பா.லக்ஷனா - கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
3ஆம் இடம்:-த.பிரியங்கா - கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை

**மத்திய பிரிவு**

1ஆம் இடம்-ச.கோபிகன் - கொக்குவில் இந்துக்கல்லூரி
2ஆம் இடம்:-இ.தனுஷா - கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தி.
3ஆம் இடம்:-த.ஜதுர்சன் - யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**மேற் பிரிவு**

1ஆம் இடம்-பு.ரசிகா - செங்குந்தா இந்துக்கல்லூரி
2ஆம் இடம்-லோ.துஷாந்தி - கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தி.
3ஆம் இடம்:-ம.நளாயினி - நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தி.

**உயர் பிரிவு**

1ஆம இடம்கௌசிகா அருளம்பலம் - கனகரத்தினம் மத்திய மகாவித்தி.
2ஆம் இடம்-கஜேந்தினி சண்முகநாதன் - கொக்குவில் இந்துக்கல்லூரி
3ஆம் இடம்:-சு.பவித்திரா - செங்குந்தா இந்துக்கல்லூரி. (ற)

# வீடியோ படப்பிடிப்பு தமிழர்

இந்த உலகில் சில துறைகளில் கேட்கப்படும் சில கேள்விகளுக்கு யாரும் விடையை எதிர்பார்க்ககூடாது ஏனெனில் அக் கேளவிகளுக்கு விடையே இல்லை என்பது தான் விடை.

வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றதா அல்லது பாதுகாக்கின்றதா என்ற வாதப் பிரதிவாதங்களை விவாத அரங்கிற்கு இரு சாராரும் மிகச் சிறப்பாக சமர்ப்பித்துள்ளார்கள். அதாவது மிகவும ஆழமாகவும், மதிநுட்பமாகவும் சமர்ப்பித்துள்ளார்கள் என்ற உண்மையை

**வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றதா? பாதுகாக்கின்றதா? என்ற விவாத அரங்கிற்கு பாதுகாக்கின்றது என தனது தீர்ப்பை வழங்குகின்றார், இவ் விவாத அரங்கின் நடுவர் பிரபல சட்டத்தரணியான புத்தூர் சி. சிவநேசன்**

எந்தவித பக்கச் சார்பும் இல்லா மல் முதலில் வெளிப்படுத்த வேண்டியுள்ளது.

முதலாவது வாதத்தில் சு. சிவராஜன் என்பவர் வீடியோ படப்பிடிப்பு கலாசாரத்தை பாதிக்கின்றது என முன் வைத்த வாதத்தில் வீடியோ படப்பிடிப்பு என் பது ஒரு சினிமா சூட்டிங்போல நடைபெறுகிறது என்று கூறியிருக்கிறார். இது உண்மையில் கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாகும்.

இன்றைய நடைமுறை வாழ்வில் குடும்பங்களில் நடைபெறும் திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா போன்ற விழாக்களில் நடைபெறும நிகழ்வுகளை வீடியோவில் படமாக்குகிறார்களா? அல்லது வீடியோ படிப்பிடிப்புக்காக அவ் விழாக்கள் நடைபெறுகிறதா? என்று யோசிக்க வேண்டியுள்ளது. இவரது இக் கருத்தை சாதாரணமானதென நாம் தட்டிக் கழிக்கமுடியாது.

அத்தோடு சிவராஜன் இன்னுமொரு கருத்தையும் முன்வைத்துள ளார். அதாவது வீடியோ படப்பிடிப்பைப் பார்ப்பவர்கள் அதில் வரும் ஆணையோ ,பெண்ணையோ திரும்ப திரும்பப் பார்த்து, பின் அதனால பல வேண்டத்தகாத பிரச்சினைகள ஏற்படுவதாகக் கூறியிருக்கிறார். இதுவும சில வேளைகளில் நடைமுறையில் காணக்கூடிய விடயமே.

வாதம் இரண்டில் யாழ். பல் கலைக்கழக மாணவி என்.சங்கவி, வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதுகாக்கின்றது என்ற வாதததை வைக்கும் பொழுது மனித வாழ்க்கை என்பது நீர்க்குமிழி போல நிலையற்றது. இன்றிருப்பவர் நாளை இருப்பார் என்பது நிச்சயமற்றது. வாழும் போது மனிதன் தன்னையும் தனது செயற்பாடுகளையும் காலச் சுவடுகளாக பதிவாக்கிக் கொள்வதில் தவறு காணமுடியாது என்ற காரணம் சாதாரணமாக தட்டிக்கழிக்க முடியாததொன்றாகும். ஆனால் வரலாற்றின் சில நிகழ்வுகளை, நேரடியாகப் பார்க்கும் காட்சிகளை இந்த விஞ்ஞான உலகம வீடியோ வாயிலாகத் தந்துள்ளது. இது ஒரு சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இவரின் விவாதத்தில் கலாசாரத்தைப் பாதிக்கின்ற அளவுக்கு வீடியோக்காரர்கள் நடந்துகொள்கின்றார்கள் என்பது உண்மைதான். அதனைக் கட்டுப்படுத்தினால் கலாசாரத்தைப் பாதுகாக்கலாம் என்பது இவரின் வாதமாகும் .இதுவும் கூட நியாயமானதொன்றாகவே தோன்றுகின்றது.

அடுத்து, வாதம் மூன்றில் ந.கலைச்செல்வி தனது வாதத்தை அவரின் பெயருக்கேற்ற முறையில் கலாசாரத்தைப் பாதிக்கின்றது என்று முன் வைத்துள்ளார். பட மெடுககும்போது பருவமடைந்த பெண்களை அங்கமங்கமாகப் படமெடுப்பது என்பது கலாசாரத்தை பாதிக்கின்றது என்ற இவரின் வாதம் நியாயமற்றது என்று சுட்டிக்காட்ட முடியாது. இதுவும் ஒரு நியாயமான வாதமாகும்.

இந்த வாதத்தில் ஒரு மனிதனின் மரண நிகழ்வைப் படமபிடித்து உறவினர்கள் திரும்பவும் பார்க்கும் பொழுது அவர்களை வேதனைப் படுத்தும் விதத்தில் வீடியோ படப்பிடிப்பு முக்கிய பங்கை வகிக்கின்றது என்ற வாதமும் சிந்திக்கப்பட வேண்டியதொன்றாகும். உண்மையில் வாழ்க்கையே ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்பொழுது ஒரு துணபகரமான நாடகம் தான். இந்த நாடகத்தைத் திரும்பவும் வீடியோவில் பார்த்து மீண்டும் மீண்டும் துன்பத்தை அனுபவிக்க வேண்டுமா என்பது உண்மையில் தேவைதானா?

வாதம் நான்கில் க.சபாநாதன் வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதுகாக்கின்றது என்ற விவாதத்தில், சில காலங்களின் பின்னர் பல கிரியைகள் மறக்கப்பட்டு கைவிடப்படக்கூடிய சூழல் உருவா

**நடுவர்: சி.சிவநேசன்**

கலாம் என்பது மட்டுமல்லாமல், வெளிநாட்டவர்கள் எமது கலாசாரததைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும் என்ற வாதமும் நியாயமானதொன்றாகும்.

இந்த வாதத்தில் பங்குபற்றும் அத்தனைபேரும் இதனை ஏற்றுத் தான் ஆவார்கள். மேலும் வீடியோ எடுப்பவர்கள் தங்களின் விருப்பப்படி எடுப்பதைத் தவிர்த்து, கலாசாரத்தைப் பேணும் விதத்தில் எடுக்க வேண்டுமென்ற கருத்துப்பட வாதத்தை வைத்துள்ளார். இவ்விடத்தில் முக்கியமான ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இப்படியான ஒரு விவாத அரங்கு ஏற்படுவதற்கு வித்திட்டவர்கள் சில வீடியோ படப்பிடிப்பாளர்களே. சில வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கிடையேயுள்ள போட்டி மனப்பான்மையும், தொழிலில் தாம் மட்டும் பிரபல்யம் அடைய வேண்டுமென்ற நடவடிக்கை யுமே எமது கலாசாரத்தைமாசுபடுத்துகின்றதாக அமைகின்றது.

வாதம் ஐந்தில் நீர்வைமணியின விவாதத்தில் சமர்ப்பித்த விடயங்களில் குறிப்பாக பூப்புனித நீராட்டு விழாவில் ஒழுங்கற்ற முறைகளில் படம் எடுக்கப்படுவதைச் சுட்டிக் காட்டியுள்ளார். இதுவும்கூட கலா சாரத்தைப் பாதிக்கின்ற ஓர் விடயம் தான்.

வாதம் ஆறில் ஜோ.ஜெஸ்ரினும் மு.சுகந்தினியும் வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதுகாக்கின்றது என்ற வாதத்தை வைத்துள்ளார்கள். இந்த விவாத அரங்கில் சமர்ப்பித்துள்ள முக்கியமான விடயம் என்னவென்றால் வெளிநாட்டில் உள்ளவர்கள் எங்கள் கலாசாரத்தை அறிந்து கொள்ளவும்,பின்பற்றவும் வழியமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஆலயங்களில், உற்சவ தினங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரடியாகப் பார்க்கும் சந்தர்ப்பத்தை தவறவிட்டவர்கள் வீடியோ படபபிடிப்புக்கள் மூலம் காணவழி சமைத்துள்ளது வீடியோ படப்பிடிப்பு என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இதுவரைக்கும் இரு சாராரின் வாதப்பிரதிவாதங்களின் முக்கியமான விடயங்களை மட்டும் சுட்டிக் காட்டி நனமை, தீமைகளைக் குறிப்பிட்டுள்ளேன்.

இருசாராரின் வாதப் பிரதிவாதங்களில் உள்ள நன்மை, தீமைகள் எல்லாவற்றையும் அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து எழுதுவது வலம்புரிப் பத்திரிகைக்கு ஒரு இக் கட்டான சூழலை ஏற்படுத்துவதாக அமையும.

இந்த உலகில் விஞ்ஞானம், கற்பனை செய்ய முடியாத அளவிற்கு வளாச்சியடைந்து கொண்டிருக்கின்றது. நாங்களும் காலத்திற்கேற்ற முறையில் எங்கள் சிந்தனைகளையும், செயல்களையும் மாற்றத் தவறினால் எங்களுக்கு எதிர்காலமே வேணடாம் என்பது போலாகிவிடும். இதற்காக உலகில் மாறிக் கொண்டிருக்கும் எல்லா நிகழ்வுகளுக்கும் ஏற்ற மாதிரி நாமும் மாறவேண்டு மென்பதும் அல்ல. அப்படி மாற நினைத்தால் நாங்கள் எங்கள எதிர்காலத்தை அழிவுப்பாதைக்கே இட்டுச் செல்வதாக அமையும். இப்படிப்பட்ட இக் கட்டான சூழலில்தான் நமது தமிழர் சமுதாயம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

இந்த விவாத அரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட வாதப் பிரதிவாதங்களை ஒரு தராசில் போட்டு எது சரி எது பிழை என்று அளவியல் முறையில் கணக்கிடமுடியாது. உதாரணமாக நிறையைப் பொறுத்தளவில் இவ்வளவு தான் எனக் குறிப்பிடலாம். கணக்கை பொறுத்தவரையில் திட்டவட்டமாக கணக்கிட்டுக் கூறலாம். இது அளவியல் துறைக்கும் கணக்கியல் துறைக்கும் பொருத்தமானதாகும. ஆனால், விவாத அரங்குகளில் சமர்ப்பிக்கப்படும் தலையங்கங்கள் அளவியலைப் போன்றோ அல்லது கணக்கியலைப் போன்றோ அளக்க முடியாததும் கணக்கிட முடியாததுமாகும்.

முக்கியமாக அரசியலில் கூட இப்படிப்பட்ட அளக்க முடியாததும் கணக்கிட முடியாததுமான கோட்பாடுகள் அமைந்ததால் தான் உலகிலுள்ள மக்கள் எது சரி எது பிழை என்ற முடிவை எடுக்க முடியாமல் திண்டாடுகின்றார்கள். இது சில அரசியல்வாதிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்து விட்டது. ஆனபடியால்தான் மக்கள் பல தரபபட்ட பிரிவுகளுக்குள் புகுந்து செயற்படவேணடியேற்பட்டுள்ளது.

இப்படிப்பட்ட ஒன்றுதான், வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதிக்கின்றதா அல்லது பாதுகாக்கின்றதா என்ற விவாதமாகும்.

இந்த விவாத அரங்கில் பங்கு பற்றியவர்களில் எண்பது சதவீதமானோர் சிறப்பாக விவாதத்தை முன்வைத்த போதிலும் மறு தரப்பினர்களின் வாதங்களில் உள்ள நியாயங்களை மறைமுகமாக ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள். அதே நேரத்தில் இவற்றை சீர் செய்வதற்கும் வழிகாட்டியுள்ளார்கள். விவாதம் இரண்டில்பல்கலைக்கழக மாணவி என. சங்கவி, வீடியோக காரர்களை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுதத வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார். இந்த உரிமை வீடியோ படப்பிடிப்பை ஒழுங்கு செய்பவர்களுக்கு உண்டு. அப்படிச் செய்யும் போது கலாசாரத்தைப் பாதுகாக்கலாம். இப் படிப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதால் கலாசாரத்தைப் பாதுகாக்கலாம்

வாதம் மூன்றில் கலைச்செல்வி தனது வாத்தில், குறிப்பாக மரண நிகழ்வு ஒன்றைத் திரும்பப் பார்ப்பது இயலாத ஒன்று என்றும், மறைந்த ஒன்றை திரும்ப நினைவூட்டி கவலையை புதுப்பிப்பதாகவே உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். இக் கருத்து சிந்திக்கப்படவேண்டிய ஒன்றுதான். ஆனாலும் இதனைக் கருத்திற்கொண்டு வீடியோ படப்பிடிப்பைத் தவிர்க்கலாமா என்ற கேள்விக்கு விடை காண்பது கஷ்டமான ஓர் விடயமாகும்.

வாதம் நான்கில் , படப்பிடிப்பு கலாசாரத்தைப் பாதுகாக்கின்றது என்ற வாதத்தைச் சமர்ப்பித்துள்ள இவர் சில அசௌகரியங்களும் இல்லாமல் இல்லை என்ற விடயத்தையும் சுடடிக்காட்டியுள்ளார். இதன் மூலம் மறு தரப்பினரின் வாதத்தின உண்மைத்தன்மையையும் முற்று

**விவாத அரங்கு—5**

முழுதாக மறுதலிக்கவில்லை.

வாதம் ஐந்தில், நீர்வைமணி அவர்கள், ஒழுங்கமைப்புடன் கூடிய முறையில் தேவை அறிந்து படப்பிடிப்புக்களை எடுத்தால் கலாசாரத்தைப் பாதுகாப்பதாக அமையும் என எதிர்பார்க்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார். இதன் அர்த்தம் வீடியோ படப்பிடிப்பு கலாசாரத்தைப் பாதிக்கின்றது என்பதல்ல என்று அர்த்தப்படுகின்றது.

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக பல நன்மைகளை இந்த உலகம் அனுபவித்து வருகின்றது. நவீன உலகில் இப்படிப்பட்ட விஞ்ஞான வளாச்சி இல்லாமல் இருந்தால் பல நெருக்கடிகளை நாம் சந்திக்க வேண்டி வரும. அதே நேரத்தில் விஞ்ஞான வளர்ச்சியால் பல தீமைகளையும் நாளாந்தம் நாம் சந்தித்து வருகின்றோம் என்ற உண்மையை மறுக்க முடியாது.குறிப்பாக மின்சாரத் தால் ஏராளமான நன்மைகளை அனுபவித்துக கொண்டிருக்கின்றோம்.

# கலாசாரத்தைப் பாதுகாக்கின்றது

அதே நேரத்தில் தீமைகளையும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். இதற்காக மின்சாரத்தை வேணடாம் என்று கூறமுடியுமா? குறைபாடு இருக்கும்பொழுது அதற்குரிய பரிகாரங்களை தேடிக்கொள்ள வேணடும். இதைப்போல் தான் வீடியோ படப்பிடிப்பால் ஏற்படும் பாதிப்புக்களை வீடியோ படப்பிடிப்பை ஒழுங்கு செய்பவர்கள் கட்டுப்படுத்த வேண்டும். உண்மையில் வரலாற்றில் நடந்து முடிந்த விடயங்களை புத்த கங்களில் தான் படிக்கின்றோம். ஆனால் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக நடந்து முடிந்த வரலாற்றை வீடியோ படப்பிடிப்பில் பார்க்கக் கூடிய தாக உள்ளது. ஆகவே சில குறை பாடுகள இருந்தாலும் வீடியோ படப்பிடிப்பு தமிழர் கலாசாரத்தைப் பாதுகாக்கின்றது என்ற தீர்ப்பையே வழங்குகின்றேன்.★

## விவாத அரங்கு - 6

விடயம்

**மதமாற்றத் தடைச் சட்டம் தேவையானதா? தேவையற்றதா?**

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

*அனுப்பவேண்டிய முகவரி*

விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

**அன்பு மாணவர்களே!**

**இன்று வியாழக்கிழமை**

**நவராத்திரி பூசை**

**ஆரம்பமாவதையொட்டி**

**'கவிதை மாலை'**

பகுதியை வலம்புரி வெளியிடுகின்றது. மாணவர்களாகிய உங்களின் கவிதையும் இடம்பெறவேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை,கற்கும் தரம், மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

**"வலம்புரி"**

**இல.15, வெள்ளாந்தெரு,**

**யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கவும்.

*குறிப்பு:* கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம். (ஆ-ர்)

### ஆந்திர அரசு

# எமது கோரிக்கையை ஏற்றாலும் ஆயுதங்களைக் கைவிடமாட்டோம்

## நக்சலைட் இயக்கத் தலைவர் கருத்து

(ஹைதராபாத்)

ஆந்திர அரசுடன் நாளை நடக்கும் பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டாலும் துப்பாக்கிகளை கீழே போடமாட்டோம். எங்கள் ஆயுதப் போர் தொடரும் என்று நக்சலைட் இயக்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

ஆந்திராவில் மக்கள் போர் படை என்ற பெயரில் நக்சலைட்டுகள் ஆயுதப் போராட்டம் நடத்திவருகிறார்கள். அவர்கள் பொலிஸாரையும், அரசியல்வாதிகளையும் சுட்டுக்கொன்று வருகிறார்கள். பொலிஸ் நிலையங்கள், அரசியல்வாதிகளின் வீடுகளை வெடிகுண்டு வீசித் தகர்க்கிறார்கள்.

அந்த நக்சலைட்டுகளின் தலைவர்களுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்த ஆந்திராவில் காங்கிரஸ் புதிய முதல்வராக பொறுப்பேற்றுள்ள வை.எஸ்.ராஜசேகர ரெட்டி முன்வந்தார். நாளை ஹைதராபாத்தில் இந்தப் பேச்சுவார்த்தை நடக்கிறது.

இதற்காக காடுகளில் தலைமறைவாக இருந்த நக்சலைட் தலைவர்கள் முதன்முறையாக நேற்றுமுன்தினம் வெளியுலகத்திற்கு வந்தனர்.

பிரகாச மாவட்டம் நல்லமலை காட்டுப்பகுதியில் கடந்த இருபது ஆண்டுகளாக மறைந்திருந்த அவர்கள் தங்கள் இயந்திரத் துப்பாக்கிகளுடன் டார்னல் என்ற இடத்திற்கு வந்தனர். அங்கு தங்கள் துப்பாககிகளை மக்கள் போர் படையின் மாநில கமிட்டி உறுப்பினர் ஷகாமுரு அப்பாராஜிடம் ஒப்படைத்தனர்.

அங்கிருந்த நரசுப்பேட்டை டி.எஸ்.பி. ஹரிகிருஷ்ணா தலைமையிலான பொலிஸ் படையினர் அவர்களை பொலிஸ் வான்களில் ஏற்றி ஹைதராபாத் நகரில் உள்ள அரசு விருந்தினர் மாளிகைக்கு பாதுகாப்புடன் அழைத்து வந்தனர்.

நக்சலைட் தலைவர்களைப் பார்க்க வழி நெடுக மக்கள் கூடியிருந்தனர். சில இடங்களில் அவர்களுக்கு மக்கள் வரவேற்பு அளித்தனர்.அந்த இடங்களில் அவர்கள் மக்களிடையே பேசினார்கள்.

மக்கள் போர் படையின் செயலாளர் இராமகிருஷ்ணா மற்றும் கணேஸ், சுதாகர் ஜனசக்தித் தலைவர்கள் அமர், றியாத் ஆகியோர் பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளனர். இவர்களில் இராமகிருஷ்ணா அறிவியல் பட்டதாரி ஆவார். ஆசிரியராகப் பணியாற்றிய இவர் நக்சலைட் இயக்கத்தால் கவரப்பட்டு அந்த இயக்கத்தில் சேர்ந்து தலைவரானார். அவரை உயிருடனோ, பிணமாகவே பிடித்துக்கொடுத்தால் ரூபா 20 இலட்சம் பரிசு வழங்கப்படும் என்று ஆந்திர அரசு அறிவித்திருந்தது. அவர் தற்போது பகிரங்கமாக மக்கள் மத்தியில் வந்துள்ளார்.

ஹைதராபாத் விருந்தினர் விடுதியில் இவ் இயக்கத் தலைவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

எங்கள் கொள்கையை நாங்கள் ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். ஆந்திர அரசுடன் நடத்தும் பேச்சில் என்ன முடிவு எடுக்கப்பட்டாலும் நாங்கள் துப்பாக்கிகளைக் கீழே போடமாட்டோம். எங்கள் ஆயுதப் போராட்டம் தொடரும். இநதப் பேச்சுவார்த்தை எங்கள் அரசியல் கேந்திரத்தின் ஒரு பகுதிதான். நக்சலைட்டுகளின் இறுதி இலட்சியம் முதலாளித்துவ சக்திகளின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்பதுதான். புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவோம் என்றார். (ப)



2004 கார்க் கண்காட்சி பாரிஸில் நடைபெற்றது. அதில் பார்வைக்கு வைக்கப்பட்ட கார்களின் அழகிய மாடல்களைப் படங்களில் காணலாம்.

## சீனாவில் 20 கோடி 'குண்டுகள்'


(பெய்ஜிங்)

சீனாவில் 20 கோடி பேர் அதிக எடையுள்ளவர்கள். இவர்களில் 6 கோடி பேர் அதிக உடல்பருமன் கொண்டவர்கள் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

சீனாவில் உள்ள பெரியவர்களில் 22.8சதவீதம் பேர் அதிக எடைகொண்டவர்களாக இருக்கிறார்கள். இவர்களில் அதிக உடல் பருமன் கொண்டவர்கள் 7.1 சதவதமானோர் என்கிறார் சுகாதாரத் துறை துணையமைச்சர்.

மேலும் அதிக உடல் பருமன் பிரச்சினை கடந்த 12 ஆண்டுகளில் 97 சதவீதம அதிகரித்துள்ளதாம். ஒருபக்கம் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் சிலர் அவதிப்பட மறுபக்கம் இப்படியொரு பிரச்சினை எழுந்துள்ளது.

அதைவிட சீனாவில் உயர் இரத்த அழுத்தத்தினால் 16 கோடி பேர் பாதிக்கப்பட்டுளளனர் என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ப)



தசராப் பண்டிகையை ஒட்டி மைசூரில் உள்ள அரண்மனைக்கு அழைக்கப்பட்டுள்ள யானைகள் அணிவகுத்து நிற்பதை படத்தில் காணலாம்.

WORLD NEWS

உலக தரிசனம்

# விபத்து நேர்ந்தால் உறவுகளுக்கு தானாக தகவல் அனுப்பும் சட்டை

## சிங்கப்பூரில் அறிமுகம்

(சிங்கப்பூர்)

முதியவர்களின் பாதுகாப்புக்காக புதிய சட்டையை சிங்கப்பூர் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

நவீனவகை 'சென்ஸார்' பொருத்தப்பட்ட இச் சட்டையை அணிந்து வெளியில் செல்லும் முதியவர்கள் தவறி விழுந்து காப்பாற்ற யாருமில்லாத சமயத்தில் சென்ஸாரிலிருந்து அவர்களின் உறவினர்களின் செல்போனுக்கு அல்லது ஈமெயில் முகவரிக்கு தகவல் சமிக்ஞைகள் தானாகவே செல்லும்.

இச் சட்டையை விஞ்ஞானி பிரான்ஸிஸ் என்பவர் உருவாக்கியிருக்கிறார். சிங்கப்பூரில் 40லட்சம் மக்கள் வசிக்கின்றனர். 2029 ஆம் ஆண்டில் இவர்களில் 5இல் ஒரு வீதமானோர் 65 வயதைக் கடந்தவராக இருப்பர் என ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த ஆய்வின் முடிவினைக் கவனத்தில் கொண்டே இச் சட்டை தயாரிக்கப்பட்டுள்ளது. (ப)

# இந்தியாவின் சனத்தொகையை குறைக்க இப்படியும் ஒரு சட்டம்

(புதுடில்லி)

அரியானா மாநிலத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்ற நகராட்சி கவுன்சிலரின் பதவி பறிக்கப்பட்டது சரிதான் என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வழங்கியுள்ளது.

அரியானா மாநிலத்தில் பஞ்சாயத்து அமைப்புகளில் இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றவர்கள் போட்டியிட தடை விதித்து சட்டம் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில் சிலேசிங் என்ற நகராட்சி கவுன்சிலர் இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றதைக் காரணம் காட்டி அவரது பதவி பறிக்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. தலைமை நீதிபதி லகோதி, நீதிபதிகள் மாத்தூர், பாலசுப்பிரமணியம் ஆகியோர் அடங்கிய பெஞ்ச் வழக்கை விசாரித்தது. நீதிபதிகள் தங்கள தீர்ப்பில் கூறியதாவது:

நாட்டின் மக்கள் தொகை எண்ணிக்கை அபாய கட்டத்தைத் தொட்டுவிட்டது. நாட்டின் வளர்ச்சியை முன்னிட்டு மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டியது கட்டாய தேவை. தேர்தலில் நிற்பதென்பதை அடிப்படை உரிமையாகவோ, சட்டப்படியான உரிமையாகவோ கருதமுடியாது. சட்டம் மற்றும் விதிமுறைகளுக்குட்பட்டே ஒருவர் தேர்தலில் நிற்க முடியும். தகுதி இழப்பு என்பது அந்த சட்டவிதிகககு உட்பட்டதுதான். எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரை தகுதி இழக்கச் செய்வது அடிப்படை உரிமைக்கு எதிரானதாகக் கருதமுடியாது. எனவே அரியானா மாநில பஞ்சாயத்து சட்ட திருத்தத்தின்படி கவுன்சிலர் சிலேசிங்கின் பதவி பறிக்கப்பட்டது சரியான நடவடிக்கையே என்றனர். (ப)



சீனாவின் பெய்ஜிங்கில் நடைபெறவுள்ள உலக அழகிப் போட்டிக்காக பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அழகிகள் அங்கு வந்துள்ளனர். போட்டிக்காக வந்த இந்திய அழகி ஒருவர் பெய்ஜிங்கைச் சுற்றிப் பார்த்தபோது எடுக்கப்பட்ட படம்.



அமேதி தொகுதியில் ஆய்வுப் பணிக்காக 4 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ராகுல்காந்தி தொகுதி மக்களின் குறைகளை பரிவோடு கேட்டுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

### பாகிஸ்தான்

# கோரி ஏவுகணையை சோதனை செய்தது

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது கடா.ஃ.பி-காவ்ரி ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

அணுகுண்டுகளைச் சுமந்துசென்று 1500 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட இவ் ஏவுகணையைப் பாகிஸ்தான் தயாரித்திருப்பது இதற்கெதிரான நாடுகளுக்கு மிகப் பெரிய சவாலாகவே அமைந்துள்ளது.

இது முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது என்று பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சகச் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

கடா.ஃ.பி -காவ்ரி என்ற இந்த நடுத்தரரக சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக இஸ்லாமாபாத்திலிருந்து வெளியாகும் செய்தி தெரிவிக்கிறது.

பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரஃப், கடந்த யூலை மாதத்தில் அளித்த பேட்டியின் போது முக்கிய ஏவுகணை ஒன்றை பாகிஸ்தான் சோதிக்க இருப்பதாகக் கூறியிருந்தார். அதன் அடிப்படையில் தற்போது இந்த ஏவுகணைச் சோதனை நடைபெற்றிருப்பதாக அந்தச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பாகிஸ்தான் பிரதமர் சவுகத் ஆசிஸ் மற்றும் புதிய தலைமைத்தளபதி ஜெனரல் எஸான் உல்ஹக், மூத்த அதிகாரிகள், விஞ்ஞானிகள் முன்னிலையில் சோதித்துப் பார்ககப்பட்ட இவ் ஏவுகணை எந்த இடத்திலிருந்து ஏவப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை. (ப)

## ஒருவருக்கு தூக்கு 9 பேருக்கு ஆயுள்

(பெய்ஜிங்)

சீனாவில் போதை மருந்து கடத்தியதாக ஒருவருக்குத் தூக்குத் தண்டனையும் மேலும் 9பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இப் 10பேரும் கைது செய்யப்பட்டபோது 12.36தொன் போதை மருந்துகள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன.

ஒரே வழக்கில் இவ்வளவு போதை மருந்துகள் கைப்பற்றப்பட்டமை சீன சட்ட வரலாற்றில் இதுவே முதல் முறை.

தூக்குத் தண்டனை பெற்ற ஜாங் மேல் முறையீடு செய்துள்ளார். மற்றவர்கள் மேல் முறையீடு செய்யவில்லை. (ப)

நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று - குறள்

# வலம்புரி

## உறுதிமொழிகளை நிறைவேற்றுவார்களா?

இனப்பிரச்சினைக்கான தீர்வில் தாமதமும், ஏமாற்றுவித்தைகளும் அரச தரப்பில் தாராளமாக நடைபெறுகிறது.

யுத்தநிறுத்த சூழ்நிலை அந்த ஏமாற்று நாடகத்தை மறைப்பதாக இருப்பதால் சர்வதேச நாடுகள் அரசு மீது நம்பிக்கை கொண்டுள்ளன.

உலக நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கை ஓர் விதிவிலக்கான நாடு. இங்கு அரசாங்கத்தை நடத்துபவர்கள் அடிமட்ட மக்களைவிட மிகவும் மோசமானவர்கள். அவர்களிடம் உண்மை, நேர்மை என்பது மிகவும் அரிதாகவே உள்ளது.

இந்த உண்மைநிலையை உணர்ந்துகொள்வதில் வெளிநாட்டுத் தலைவர்கள் தவறிவிடுவதால், இலங்கை அரசுத் தலைவர்கள் வழங்குகின்ற உறுதிமொழிகளையும், உத்தரவாதங்களையும் அவர்கள் நம்பிக்கொள்கின்றனர். இந்த நம்பிக்கை விடயத்தில் அண்டைநாடான இந்தியாவும் விதிவிலக்கல்ல.

நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்திருந்தார்.

அச்சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னெடுக்கின்ற சமாதான முயற்சிகள் எதுவாயினும், அதற்குத் தாம் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக உத்தரவாதம் வழங்கியுள்ளார்.

இதே உத்தரவாதத்தை இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாமுடனான சந்திப்பின் போதும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்குச் செல்வதற்கு முன்னதாக "மக்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியைக் கைப்பற்றுவோம்" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்த ரணில், இந்தியாவிற்குச் சென்றதும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் சமாதான முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் எனக் கூறியுள்ளார்.

இதிலிருந்து அவரின் முன்னுக்குப்பின் முரண்பட்ட கருத்துக்கள் தெரியவருகின்றது. உண்மையில் ரணில் விக்கிரமசிங்க ஓர் நேர்மையான தலைவராக இருந்தால், தான் முன்னெடுத்த சமாதானப் பேச்சுக்களின் அடிப்படையில் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்காலசபைத் திட்டவரைபை ஏற்றுக்கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதாக இருந்தால், ஜனாதிபதியின் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்குவோம். இல்லையேல் எதிர்க்கட்சியினராகிய எமது ஆதரவு ஜனாதிபதிக்குக் கிடைக்கமுடியாது எனவும், விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்டவரைபிற்கும் புறம்பான எந்த சமாதான முயற்சிகளும் வெற்றிபெறமாட்டாது எனவும் அவர் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் எடுத்துக் கூறியிருக்கவேண்டும்.

அவ்வாறு கூறியிருப்பாராக இருந்தால் இந்தியாவின் அழுத்தம் ஜனாதிபதியின் பக்கம் திரும்பியிருக்கவும் கூடும். இதைவிடுத்து ஜனாதிபதி முன்னெடுக்கும் சமாதான முயற்சிக்கு ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றோம் என மொட்டையாகக் கூறுவது இந்திய அரசுத் தலைவர்களிடம் சொற்பகால நன்மதிப்பைபெற உதவுமே தவிர, இலங்கை இனவிவகாரத் தீர்வில் எந்த நன்மையையும் வழங்கமாட்டாது.

இதேபோன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஐ.நா. சபை உரையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் விசுவாசமாக - முனைப்புடன் செயற்படுவதாகக் கூறினார்.

இதனை ஐ.நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட உலகத் தலைவர்களும் கரகோசம் செய்து வரவேற்றனர்.

ஆனால், ஜனாதிபதி தனது பதவிக் காலத்தை மேலும் ஒருவருடம் நீடிப்பதற்காக நேர்மையற்ற வழியைக் கையாண்டு வருகின்றார் என்ற உண்மையை அவர்கள் அறியவில்லை. ஆக, நேர்மையற்ற தலைவர்களின் உறுதிமொழிகளும் நேர்மையற்றதுதான் என்பதே உண்மை.

# 'நொறாட்' திட்டங்களைப் பார்வையிட நோர்வே பிரதிநிதிகள் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ் .குடாநாட்டில் இயங்கும் நோர்வே அரசசார்பற்ற நிறுவனமான நொறாட் மேற்கொண்டுவரும் திட்டங்களைப் பார்வையிடுவதற்கு நோர்வேத் தூதரக முதலாவது செயலாளர் கிறிஸ்ரியன் போக்னர் மற்றும் ஆலோசகர் விஜயநாதன் சாலோகநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் யாழ். நகருக்கு வருகைதந்தனர்.



சென்ற வருடம் நோர்வே அரசசார்பற்ற நிறுவனமான நொறாட அமைப்பால் யாழ்.குடாநாட்டில 15 மில்லியன் ரூபா நிதி செலவில் யாழ்ப்பாண நீர் வளச் சூழல் அபிவிருத்தித் திட்டம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இத்திட்டத்தில் யாழ். மாநகரசபைக்குட்பட்ட பகுதியிலுள்ள 45 குளங்களை புனரமைத்து அதனோடு தொடர்புடைய வாய்க்கால்களும் புனரமைப்புச் செய்யப்படுவதுடன் சூழல் பாதுகாப்புக்காக யாழ். மாநகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் இருக்கும் கழிவுகளை அகற்றுவதும் அடங்கும்.

இத் திட்டங்களை நேரில் பார்வையிடுவதற்கும் நொறாட் நிறுவனம் எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்காகவே நேற்று முன்தினம் யாழ். நகருக்கு இவர்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், யாழ்.குடாநாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற தமது திட்டம் சிறந்த முறையில் நிறைவேறினால் தமது நிறுவனம் மேலும் பல திட்டங்களை யாழ்.குடாநாட்டில் நடைமுறைப் படுத்தவுள்ளதாக கிறிஸ்ரியன் போக்னர் தெரிவித்தார்.

மேலும், இலங்கையினுடைய கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பான விடயங்களே தமது முக்கியமான திட்டங்களாக உள்ளதாகவும், இதனைத் தாம் செய்து வருவதாகவும் இத் திட்டங்களில் யாழ்ப்பாணமும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள மீன் வளத்தை நோர்வே நாட்டு சீடா என்ற அமைப்பும் சுவீடன் அரசும் சேர்ந்து ஆய்வு செய்து இதற்குரிய முகாமைத்துவம் ஒன்றை மிகவிரைவில் மேற்கொள்ளவுள்ளன. (ந-19)

# யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள கொரிய பிரதிநிதிகள் யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய கட்டடத் தொகுதியை அமைப்பதற்கும், தொழில்நுட்ப இயந்திரங்களை பொருத்துவதற்குமென கொரிய கட்டட நிபுணர் குழுவொன்று நேற்று முன்தினம் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தந்தனர்.



கொரிய நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிமைக் வோன்கிம் மற்றும் கொரிய நாட்டு கட்டட நிபுணர்களான ஜே.வி. மன்யோங், யோக் சோச் ஆகியோரே யாழ் தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தந்தனர்.

கொரிய நாட்டு வதிவிடப் பிரதிநிதி அங்கு உரையாற்றும் போது தமது நாட்டு கொய்க்கா என்ற அமைப்பு வளர்முக நாடுகளுக்கு நன்கொடை வழங்கி அந நாட்டின் வளர்சசிக்காக உதவிவருவதாகத் தெரிவித்தார்.

மேலும், ஒன்றரை வருடங்களுக்கு முன்பு இலங்கையில் வடக்கு- கிழக்கு புனர்வாழ்வு மற்றும் அமைதித் தர்வில் கொரியா முக்கிய பங்காக இருந்தது எனவும், சென்ற வருடம் யூன் மாதம் நடைபெற்ற டோக்கியோ மாநாட்டில் தென்கொரிய அரசாங்கம வடக்கு- கிழக்கில் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ஆர்வம் காட்டியது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் கொரிய அரசாங்கம் இலங்கையில் அபிவிருத்தி மற்றும் நிலையான சமாதானம் ஏற்படுவதை மிகவும விரும்புகிறது. இதனால்தான் கொரியா சில செயற்திட்டங்களை இங்கு நடைமுறைப்படுத்தி இலங்கையின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந-19)

### கைதான மீனவர்கள் விடுவிக்கப் படாவிடின்

# இலங்கைக்குப் படையெடுக்க இந்திய மீனவர்கள் தீர்மானம்

(சென்னை)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்கக் கோரி எதிாவரும் 21ம் திகதி சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச சேர்ந்த மீனவசங்கங்களின் ஆலோசனைக் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோதே தமிழக, புதுவை மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு இவ்வார்ப்பாட்டத்தை நடத்த முடிவு செய்துள்ளது.

ஆர்ப்பாட்டம் வெற்றியளிக்காவிட்டாலும் தமிழக அரசு மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்காவிட்டாலும் விசைப் படகு மீனவர்கள் வேலைதேடி இலங்கைக்குச் செல்வ



வேலைநிறுத்ததில் ஈடுபட்டுள்ள மீனவர்களின் படகுகள்

தென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பின்னரும் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் தமது குடும்பங்களுடன் படகுகளில் இலங்கைக்கு வேலைதேடி செல்வதன்றும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, மேற்படி கோரிக்கையை வலியுறுத்தி இந்திய மீனவர்கள் தொடர்ச்சியான வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-8)

# சிறுவர் முதியோர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா இன்று வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ. சிவசுவாமி, சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் அரிமாக் கழகத் தலைவர் த.அகபானந்தன், கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் கே.வி.சிவனேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய நிகழ்வில் முதியோரை கௌரவிக்கும் நிகழ்வும் கட்டுரை கவிதைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் வைபவமும் இடம்பெறவுள்ளது. (ந-19)

# யாழ்.வணிகர் கழக குழுவினர் இன்று சீனாவிற்குப் பயணம்

(யாழ்ப்பாணம்)

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் யாழ். வணிகர் கழக அங்கத்தவர்கள் 20 பேர் அடங்கிய குழுவொன்று சீனாவிற்குப் பயணமாகவுள்ளது.

யாழ். வணிகர் கழகத்தின் தலைவர், செயலாளர், நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்கள் 20 பேர் அடங்கிய குழுவினர் இன்று வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு யாழபபாணத்திலிருந்து கொழும்புக்கு பயணமாகி இன்று நள்ளிரவே சீனாவுக்குச் செல்லவுள்ளனர்.

சீனாவின் கன்ரோன் நகரில் நடைபெறும் 12 ஆயிரம் காட்சியறைகளைக் கொண்ட மாபெரும் வர்த்தகக் கண்காட்சியை பார்வையிடுவதற்காகவே இக்குழுவினர் அங்கு பயணமாகின்றனர்.

அத்துடன் இக்குழுவினர் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை 8 நாட்கள அங்கு தங்கியிருக்கும் காலத்தில சீனத் தொழில் துறைசார் வல்லுநர்களுடன் பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்தும் விரிவாக ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## சாயி அருளமுதம்



உணவைப் பற்றியோ அல்லது வேறு தேவைகளையிட்டோ எனக்கு குறிப்பிட்ட எவ்வித அவாவும் கிடையாது. எனது ஆனந்தம் தான் எனது உணவாகும். அந்த உணவைப் பெறு வதற்கு நான் மற்றவர்களுக்கு மகிழ்ச்சியை யளிதது அவர்களுடைய மகிழ்ச்சியிலிருந்து ஆனந தம் பெறுகின்றேன். எனது வாழ்வே· எனது நற்செய்தி என்று நான் கூறுவது இதையே குறிப்பிடுகிறது. மற்றவர்கள் அனுபவிக்கும் மகிழ்ச்சியிலிருந்து ஆனந்தம் பெறுவது தெய்வகப்பண்பாகும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

# கொக்குவில் படுகொலையின் 17 ஆவது நினைவுதினம் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படிலேனில் இந்திய இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்ட 40 அப்பாவி பொதுமக்களினது 17 ஆம் ஆண்டு நினைவு தினம் பிரம்படிச் சந்தியிலுள்ள நினைவுத் தூபியடியில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும், யாழ்.மாவட்ட அரசியல்துறைத் துணைபொறுப்பாளர் செம்மணன், யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர். கலைவிழி, யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதா, நல்லூர் அரசியல்துறைப்பொறுப்பாளர் செழியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவர்கள் தவிர யாழ் பல்கலைக் கழக ஊழிய சங்கத்தலைவர் தங்கராசா, யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் செல்வக்குமார், நல்லூர் மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் பூமகள், யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவ ஒன்றியத்தலைவர் கஜேந்திரன், நாமகள் வித்தியாலய மாணவர்கள், படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பல நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் பொதுச்சுடர், ஈகச்சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. அத்துடன், நினைவுத் தூபிக்கு மலர்மாலை அணிவித்ததுடன், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

நாமகள் வித்தியாலய அதிபர், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பத்மினி, கஜேந்திரன், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் அஞ்சலியுரை ஆற்றினர். (ற-19)

## பரிசளிப்புவிழா

யாழ். யூனியன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.புண்ணியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு வலிகாமம் கல்விவலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் ச. கைலாசநாதன் சிறப்புவிருந்தினராகவும் கலந்துகொள்வர். (வ)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மண்டபத்தில் பிற்பகல் 6.30 மணிக்கு பிரதி வெள்ளிதோறும் நடாத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவில் நாளை வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் இ.மகேஸ்வரராஜ் 'சக்தி வழிபாடு' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ற)

## தேர்தல் முறையில்...

போது ஏற்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பு மூலம் கொண்டுவரப்பட்ட தற்போதைய தேர்தல் முறையின்கீழ் நாட்டில் பாரிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் வெஸ்மினிஸ்டர் முறைத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டால் அவர்களின் பிரதிநிதித்துவம் பாதிக்கும் என்ற கருத்து நிலவுகிறது. இதனால் அதனை நிவர்த்தி செய்யும் வகையில் நாட்டில் கலப்பு தேர்தல் முறையை அறிமுகப்படுத்தி அதன் மூலம் உறுதியான அரசாங்கம் ஒன்றை அமைக்கக்கூடியதாக இருக்கும் என்று கூறிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இனப்பிரச்சினைக்கு சமாதான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும், நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பது குறித்தும் அரசாங்கம் யோசித்து வருவதாகவும் பொது நலவாய நாடுகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார். (ம)

## பொலிஸார்...

அதிகாரி தரத்திலுள்ள ஒருவர் பிணையாளியாக இருக்கவேண்டும் என நிபந்தனை விதித்தார். அத்துடன் நீதிமன்ற அனுமதியின்றி யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து வேறு இடங்களுக்குச் செல்லக் கூடாது எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, 44 சந்தேக நபர்களும் இன்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். (ச-19-43-101)

## திருமலையில்...

யினரையும் விடுவிக்கக்கோரி நேற்று வீதி ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றுள்ளது. இதனால் வியாபார நிலையங்கள், சந்தைகள் மூடப்பட்டிருந்தன. அத்தோடு பாடசாலைகளும் இயங்கவில்லை. அரசாங்க திணைக்களங்களுக்கு தமிழ் ஊழியர்கள் மட்டும் சமுகமளித்திருந்தார்கள்.

இருப்பினும், வாகனப் போக்குவரத்து சேவைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தமையினால் அந்த ஊழியர் வரவும் குறைவாகவே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

## குடத்தனைக்...

அதே இடத்தைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை றெஜிமென் (வயது 19) என்பவர் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தங்களைத் தாக்கியவர்கள் கொச்சைத் தமிழில் உரையாடியதாக காயமடைந்த மீனவர் தெரிவித்தார். (ச-105,35)

## இலங்கை - இந்திய...

புதுடில்லியில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போதே அரசியல் தீர்வு ஒன்றின் அடிப்படையிலான பேச்சுவார்த்தை மூலமே நிரந்தரத் தீர்வை எட்டமுடியும் என்று சோனியாகாந்தி எதிர்க்கட்சித் தலைவரிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து இருதலைவர்களும் இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக நீண்டநேரம் விவாதித்ததாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன. (ம)

## ஓட்டோ சாரதி...

நேற்று முன்தினம் மாலை செட்டிக்குளம் செல்வதற்கு என வவுனியா நகரிலிருந்து 3 பேர் இவரது ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். இந்த நபர்கள் இடைவழியில் வைத்து இவரை படுகொலை செய்துவிட்டு பாழடைந்த கிணற்றில் வீசிவிட்டு ஓட்டோவை கடத்திச்சென்றுள்ளனர்.

வவுனியாவிற்கு வெளியே இவ் ஆட்டோ கடத்தப்படுவதை தடுப்பதற்காக எல்லைப் புறத்திலுள்ள சகல சோதனைச் சாவடிகளுக்கும் இதுற்றிய தகவல் அறிவிக்குமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழின் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (த-121)

## சோதனைச்...

போலி ஆவணங்களை வைத்திருந்ததாக குற்றம்சுமத்தி, மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த என்.ராஜேந்திரா என்பவர் மடு வீதி சோதனைச் சாவடியில் வைத்து 11 ஆம் திகதி பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபரையும், அவரது வாகனத்தையும் மன்னார்ப் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். (த-121)

### மட்டு. சிறையில் விளக்கமறியலிலுள்ள

# விடுதலைப் புலிப் போராளிகள் 10 பேருக்கும் பிணை அனுமதி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. கடந்த வியாழக்கிழமையும், நேற்று முன்தினமும் பிணை அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனையில் கிரனைட்டுடன் கைதுசெய்யப்பட்ட பயஸ் இராஜேந்திரா (குலதீபராஜ்), வடிவேல் சந்திரகுமார் (பிரசாத்) மற்றும் கல்லடி பாலத்தில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட 4 பெண்கள் உட்பட 8 பேரும் பிணையில் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

விநாயகமூர்த்தி சியாமளா (சுடர்ஒளி), நவரத்தினம் மஞ்சுளா (திலகவாணி), நவரத்தினம் புனிதமலர் (தேர்கோதை), சிவஞானம் திருமஞ்சு (தமிழிசை), தியாகராஜா முரளிதரன் (கங்காளன்), கோபாலசிங்கம் தயானந்தம் (நந்தன்), சிறிதரன் சுதாகரன் (கண்ணன்), கதிரேசபிள்ளை ரஜீவகுமார் (நதீசன்) ஆகியோரே குறிப்பிட்ட எட்டுப்பேரும் ஆவர்

இந்த 10 பேரையும் தலா 50ஆயிரம் ரூபா ரொக்கம், தலா 50 ஆயிரம் ரூபா கொண்ட இருவரது சரீரப்பிணை ஆகியவற்றில் செல்ல அனுமதித்துள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம், வாழைச்சேனை பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட இருவரையும் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை வூாழைச்சேனை பொலிஸ் நிலையத்திலும்.

கல்லடிப்பாலத்தில் கைது செய்யப்பட்ட 8 பேரும் மாதக் கடைசி ஞாயிற்றுக் கிழமையில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திலும் ஆஜராக வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது.

திருகோணமலையில் தம்வசமுள்ள இரண்டு ஊர்காவல் படை வீரர்களை விடுவிப்பதற்கு போராளிகளை விடுதலை செய்ய வேண்டும் என விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ற)

# கட்டுப்பாட்டை இழந்த மினிபஸ் வீட்டு வளவினுள் புகுந்தது!

(புங்குடுதீவு)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மினிவான் ஒன்று வேலியை பிரித்துக்கொண்டு வீட்டு வளவினுள் புகுந்தது.

இச்சம்பவம் நேற்றுமாலை 6.30 மணியளவில் புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் வான் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது. வேகக் கட்டுப்பாட்டை இழந்த மேற்படி வான் வீட்டு வளவினுள் புகுந்தபோதும் பயணிகள் மற்றும் வீட்டில் இருந்தோர் தெய்வாதீனமாக காயங்கள் எதுவுமின்றித் தப்பினர்.

இதேவேளை, கடந்த 7 ஆம் திகதியும் குறிகாட்டுவானிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்று புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ச-126)

## செய்திக்கு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

'பண்ணை வீதியில் விபத்து, குடும்பஸ்தர் ஒருவர் பலி' என நேற்றைய வலம்புரியில் 12 ஆம் பக்கத்தில் செய்தி ஒன்று வெளியாகியிருந்தது. மேற்படி விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழந்த போதும் அதில் மினிபஸ் சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று தெரிவித்து ஊர்காவற்துறை தனியார் சிற்றூர்திசேவை சங்கத தலைவர் வி.ஞானசம்பந்தர், செயலாளர் சி.ஜெயரட்ணம் ஆகியோர் ஒப்பமிட்டு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர். (த)


## பதவிவெற்றிடம்

**உதவி ஆசிரியர்கள் (இரவுக் கடமை- ஆண்கள்)**

**(பத்திரிகைத்துறையில் அனுபவமுள்ளவர்கள்)**

**அலுவலகச் செய்தியாளர்கள் (உள்ளகம்- பெண்கள்)**

**குறிப்பு:** யாழ். நகர மையத்திலிருந்து 10 கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும்.

தகுதியுடையவர்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 15.10.2004 வெள்ளிக்கிழமை (நாளை) பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.

வலம்புரி -சங்குநாதம்
யாழ்ப்பாணம்

நிர்வாக உத்தியோகத்தர்

## அன்பு வாசகர்களே

உங்கள் நன்மை – நலன்கருதி
வாரமலர்
சங்குநாதம்
உங்கள் வலம்புரியுடன் இணைக்கப்படுகின்றது

சங்குநாதத்தில் வெளிவரும் ஆக்கங்களை
தினந்தோறும் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்.
உங்கள் ஆக்கங்கள், போட்டிமுடிவுகளை
வலம்புரி -சங்குநாதம்
இல15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு அனுப்பத் தவறாதீர்கள்.

## முக்கிய அறிவித்தல்

14.10.2004 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த பாடும்மீன் கழக சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளது. சீட்டிழுப்பு 25.12.2004 அன்று நடைபெறும்.

நன்றி

குருநகர் பாடும்மீன்
விளையாட்டுக்கழகம்

(8891)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2004 இல் அச்சிட்டு வெளிமிடப்பட்டது.